






# ஞானச்சுடர்

## பங்குனி மலர் 2005

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


உ



# குறள் வழி

**தெளிவில் அதனைத் தொடங்கார் இளிவென்னும்**
**ஏதப்பா டஞ்சு பவர்**

பொருள்:- தமக்கு இழிவாகிய குற்றமுண்டாவதை அஞ்சுகின்றவர் நன்மை தரும் என்று தெளிவாக அறியாத கருமத்தைச் செய்யத் தொடங்கமாட்டார். (464)




## நற்சிந்தனை

### குதம்பாய் – 5

நமனு மணுகுவனோ நாதனை நாம்பணிந்தால்
சமனாக நின்றிடடி - குதம்பாய்
சமனாக நின்றிடடி

விடத்தை மிடற்றில்வைத்த விமலன ருளைப்பெற்றால்
சடத்தின்மேல் ஆசையுண்டோ - குதம்பாய்
சடத்தின்மேல் ஆசையுண்டோ

இணக்கமா யிருந்துபார்த்தால் எல்லாம் சிவன்செயலாம்
பிணக்கைநீ விட்டிடடி - குதம்பாய்
பிணக்கைநீ விட்டிடடி


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 87

## 2005 பங்குனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை..... | வை.க. சிற்றம்பலம் | 1 - 2 |
| சங்கரா ஆர்கொலோ சதுரர் | சி. செல்லமுத்து | 3 - 4 |
| சிறுத்தொண்ட நாயனாரும்... | த. நாகராசா B.A | 5 - 6 |
| அடியைப்போல அண்ணன், தம்பி | நா. நல்லதம்பி | 7 - 9 |
| துன்பம் நீங்க | இரா சிவஅன்பு | 10 - 12 |
| மானுடத்தை மேன்மைப்..... | வ. குமாரசாமிஐயர் | 13 - 16 |
| சிவ தத்துவம் | கு. நவரத்தினராஜா | 17 - 18 |
| அருணகிரி சுவாமிகள் அருளிய.... | சி. வேலாயுதம் | 19 - 20 |
| திருநாவுக்கரசரும் பண்ணினோர்... | தி. பொன்னம்பலவாணர் | 21 -23 |
| கணம்புல்ல நாயனார் | க. சிவசங்கரநாதன் J.P. | 24 - 25 |
| திருக்குறள் - திருவாசகம்.. | Dr. கஸ்தூரிராஜா | 26 - 27 |
| அண்டினோர்க்கு அனைத்தையும்... | நீர்வை மணி | 28 - 29 |
| வந்திப்பார் மதுரக்கனி | முருகவே பரமநாதன் | 30 - 32 |
| ஆன்மீக வளங்கள், விழுமியங்கள்.. | கு. சோமசுந்தரம் | 33 - 34 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 35 - 37 |
| அகவை அறுபதில் மணிவிழா.. | க. சசிலேகா | 38 - 39 |
| முத்துமாரி அம்மனுக்கு ஒரு.. | கந்தைக்கணபதி | 40- 41 |
| ஆட்கொண்ட போது | சி. யோகேஸ்வரி | 42- 43 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 44- 48 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/=

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ

# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

வெளியீட்டுரையை ஆசிரியர் திரு துரை கணேசமூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள். கணேசமூர்த்தி அவர்கள் தமது ஆரம்ப உரையில் ஆச்சிரமமும் பேரவையும் மேற்கொண்டுவரும் பல்வேறு சமூக சமயப்பணிகள் பற்றி குறிப்பிட்டு அதனால் சமூகம் அடைந்துவரும் நன்மைகளையும் சுட்டிக் காட்டினார்கள்.

சமய நிறுவனங்கள் இது போன்ற பணிகளை மேற்கொள்வது எமது சமயத்திற்கு பெருமை தரும் விடயம் என்பதைக் குறிப்பிட்டதுடன் அண்மையில் சுனாமி தொடர்பான பாதிப்புக்குள்ளானவர்களுக்கு பல்வேறு செயற்பாடுகளை ஆச்சிரமம் மேற்கொண்டு வருவதைப் பாராட்டினார்கள்.

இந்த வரிசையில் ஞானச்சுடர் வெளியீடு ஏனையவர்களுக்கு முன்மாதிரியான முறையில் வெளியிடப்படுவதாகக் குறிப்பிட்டார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

எழுத்தாளரும் ஆசிரியருமான ஐ. சண்முகலிங்கம் அவர்கள் மாசி மாத மலருக்கான மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். யோகர் சுவாமி போன்ற மகான்கள் காலத்திற்கு காலம் தோன்றி உலகமக்களை உய்வித்துக் கொண்டிருப்பதை வெளிப்படுத்தி அவர்களை நாம் இனங்கண்டு அவர்களை வாழ்த்தி வணங்கி பயன் அடையவேண்டும் என்பதை அடியவர்களுக்கு வெளிப்படுத்தினார்கள்.

ஞானச்சுடர் சஞ்சிகையின் உள்ளடக்கம் பற்றி பொதுவாகவும் அதில் உள்ள சில விடயங்கள் பற்றி குறிப்பாகவும் தனது கருத்துக்களை வெளியிட்டார்கள். ஞானச்சுடரில் தர்ம நெறி பற்றி குறிப்பிடப்பட்டிருந்ததை ஆழமாக அடியார்களுக்கு எடுத்துக் கூறி தர்ம நெறியில் மக்கள் வாழ்வதிலிருந்து விலகிச்செல்வதை கவலையுடன் குறிப்பிட்டார்கள்.

சுடரில் திரு கனக நாகேஸ்வரன் அவர்கள் எழுதிய கட்டுரை தன்னை மிகவும் கவர்ந்த கட்டுரை என்பதையும் அதற்கான காரணங்களையும் சபையினருக்கு எடுத்துக் கூறினார்கள்.

திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள் ஒரு எழுத்தாளன் என்ற வகையில் ஞானச்சுடர் தொடர்பான ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் முன்வைத்தார்கள். நிகழ்வின் இறுதியில் வாசகர் போட்டியில் வெற்றிபெற்றோர்க்குரிய பரிசில்களும் வழங்கப்பட்டன.

உ

# சுடர் தரும் தகவல்

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் மொழியும் மதமும் முக்கியமானவையாக அமைந்துள்ளன. தனிப்பட்ட மனிதனது வாழ்வியலுடன் பல்வேறு வகையில் அவன் பேசுகின்ற மொழியும் அவன் பின்பற்றுகின்ற மதமும் பின்னிப்பிணைந்து காணப்படுவதுடன் அவனது வாழ்வியலின் போக்கைத் தீர்மானிப்பதிலும் அவனது மொழியும் மதமும் பெரும் பங்குவகிப்பதையும் காணமுடிகிறது. முக்கியமாக அவனது ஜீவஆத்மாவை வழிப்படுத்துவதில் இவை இரண்டுமே பிரதான இடத்தை வகித்துக் கொண்டிருப்பதை நாம் ஒவ்வொருவருமே உணர்ந்து கொள்ளமுடியும்.

அதே நேரம் சமூகரீதியாக ஒருவனை அடையாளப்படுத்தும் பொழுது அவனது மொழியும் அவன் பின்பற்றுகின்ற மதமும் இணைகின்ற பொழுது அது மிகவும் முக்கியமானதும் துல்லியமானதுமான அடையாளமாக நோக்கப்படுகின்றது. இலங்கையை எடுத்துக்கொண்டால் தமிழ் மொழி பேசுபவர்கள் எல்லோரும் தமிழர்களாக நோக்கப்பட்டாலும் மொழியுடன் மதத்தையும் இணைக்கும் பொழுதுதான் ஒவ்வொரு சமூகக்குழுக்களையும் சிறப்பாக இனம் கண்டு அடையாளப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

இந்தவகையில் இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகவும் இந்து மதத்தை தமது வழிபாட்டு மார்க்கமாகவும் கடைப்பிடிக்கின்ற மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் சமூகமாகக் கணிக்கப்படுகின்றனர். இவர்கள் இலங்கையின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் இவர்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, நாகரிகம் என்பன எல்லாம் இந்தமக்கள் தொகுதியை தனித்துவமானதாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. சுருக்கமாகக் கூறுவதானால் பிரதேசரீதியான ஒரு வேறுபாட்டைத் தவிர ஏனைய அம்சங்கள் எல்லாவற்றிலும் இவர்கள் ஒற்றுமைப் பண்புள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். இந்த ஒற்றுமைப்பண்பை மேலும் வளர்க்க வேண்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதும் என்பதை நாம் அனைவரும் உணருதல் வேண்டும். ஈழத்தில் சைவமும் தமிழும் இணைந்த தாகவே வளர்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் எல்லாக் கிராமங்களிலும் முக்கியமாக பெரும்பான்மை மக்கள் மத்தியில் வாழுகின்ற சைவ சமயத்தைப் பின்பற்றுகின்ற தமிழர்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் தாம் விரும்பியோ, விரும்பாமலோ தமது அடையாளங்களை இழந்து வருவதை நாம் காணமுடிகிறது. இதனை வடக்குக்கிழக்குப் பகுதிகளில் வாழுகின்ற சைவசமயத்தவர்கள் உணர்ந்து அவர்களை நாடிச்சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி அவர்கள் தமது அடையாளத்தை இழந்து போகாது பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும்.

உ

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A.V. முருகையா**

(அவுஸ்திரேலியா)

**இ. சங்கரலிங்கம்**

(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு.)

**M. திலகநாதன்**

(சுவீஸ்)

**இராமசாமி திருச்செல்வம்**

(தலைவர் பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

**நா. நவராஜ**

(உளவள துணையாளர் யாழ்)

**அ. வரதராசா**

(66, வரியப்புலம் வீதி, சுன்னாகம்)

**வே. நடராசா**

(தும்பளை மேற்கு)

**திரு சி. கிருஸ்ணபிள்ளை J.P.**

(ஆவரங்கால்)

**பொதுமுகாமையாளர்**

(வலிகிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம் அச்சுவேலி)

**பொதுமுகாமையாளர்**

(பனை தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம் அச்சுவேலி)

**திரு சி. சந்திரலிங்கம், J.P.**

(பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை)

**திரு செ. செல்வநாயகம்**

("செல்வா ஸ்ரோர்ஸ்" ஆவரங்கால்)

**திரு க. இராசதுரை**

(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால்)

**திரு சோமசுந்தரம் செல்வக்குமார்**

(சன்சில்க் றைக்கிளின் சென்ரர் G.P.S. றோட் கல்வியங்காடு)

**திரு இ. சொக்கலிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி)

**உரிமையாளர்**
(புதிய குகானந்தா, தட்டாதெருச்சந்தி யாழ்ப்பாணம்)

**திரு க். இராஜதுரை அதிபர்**
(வதிரி பாடசாலை)

**உரிமையாளர்**
(சுபாஸ் வெதுப்பகம் நெல்லியடி)

**திரு ஜி. ஜெயப்பிரகாஸ்**
(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

**திரு சி. கணபதிப்பிள்ளை**
(தலைவர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

**திரு ந. விஜயகுமார் ஆசிரியர்**
(ஹாட்லிக் கல்லூரி)

**திரு S. கணேஸ்**
(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்)

**அதிபர்**
(மத்திய கல்லூரி- யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(அம்பாள் ஸ்ரோர்ஸ் வல்லை வீதி சங்கானை)

**திரு கு. செல்வரெத்தினம்**
(நிக்ஷன் பல்பொருள் வாணிபம் அச்சுவேலி)

**திரு வை. துரைராசா**
(ஒஸ்கா வீதி, உரும்பராய் தெற்கு)

**திரு ந. நவரெட்ணம்**
(மகேஸ்வரி வாசா ஆனைக்கோட்டை)

**திரு சி. வெற்றிவேலாயுதம்**
(இயக்குநர் வலம்புரி)

**திரு S. விமலராசா**
(தேவாலய வீதி சங்கானை)

**உரிமையாளர்**
(புதிய நகுலா நகை மாளிகை கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்)

**திரு வே. கிருஸ்ணபிள்ளை**
(K.V.K அரிசி ஆலை உடுப்பிட்டி)

**திரு M.B. முருகதாஸ் (கல்யாணி)**
(வல்வெட்டித்துறை)

**திரு சி. வல்லிபுரம்**
(தும்பளை, பருத்தித்துறை)

**திருமதி ரஜனா ஜெயகேஸ்வரன்**
(வீரபத்திர கோவிலடி கதிரிப்பாய்)

**திரு நா. செல்வநாயகம் (கபில்)**
(அரச வீதி உரும்பராய் கிழக்கு உரும்பராய்)

**உரிமையாளர் (கந்தசாமி அன்சன்ஸ்)**
(பலசரக்கு வியாபாரம் சங்கானை)

**திரு சு. கந்தசாமி**
(இளை. த. அதிபர் விக்னா கொமினிக்கேசன் பொலிகண்டி)

**லயன் சபா இரத்தினசிங்கம் J.P.**
(சபா, ரேடர்ஸ் அச்சுவேலி)

**இரத்தினம்மா பிரபாகரன்**
(இரத்தினவாசா மல்வம் உடுவில் சுன்னாகம்)

**திரு V. பரமானந்தம்**
(கொள்வனவு உத்தியோகத்தர் பரு. ப.நோ.கூ. சங்கம்)

**திரு வி. விஸ்வகுமார்**
(ஸ்ரீரங்கம் கேணியடி, கொக்குவில் மேற்கு)

**திருமதி இ. தில்லையம்பலம்**
(திருவாதெனி இமையாணன்)

ஆச்சிரமப் பணிகளுக்கு உதவிபுரிய விரும்புவோர்
கீழே உள்ள முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்

**செ. மோகனதாஸ்**
**க.இ. P. 7481**
**இலங்கை வங்கி**
**பருத்தித்துறை.**
தொலைபேசி இலக்கம்
**021 - 2263406**

உ

# திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரதேவ நாயனார்

முதுபெரும் புலவர், கலாபூஷணம், ஆசிரியர் வை. க. சிற்றம்பலம் அவர்கள்.

நக்கீரர் சிவபிரானையன்றி ஏனைய கடவுளரைப் பாடாத தருக் குடையவர். ஒன்பதாந் திருமுறையில் நக்கீரர் பாடியதாகப் பத்துப் பிரபந்தங் களுண்டு. அவற்றில் திருமுருகாற் றுப்படையுமொன்று. பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில் நக்கீரர் பற்றிய வரலாறுகள் உண்டு. சீர்தானத்திப் புராணம் பரங்கிரிப் புராணத்திலுமுண்டு. எனினும் திருமுரு காற்றுப்படை பாடிய வரலாறு பற்றியே அடியேன் இங்கு விவரிக்கிறேன். அது தொடர்பாக:-

சண்முக பாண்டியன், தனது மனைவியின் கூந்தலை முகர்ந்து கூந்தலுக்கு இயற்கை மணமுண்டோ என்பதைத் தெரிதற்காகத், தனது கருத்தையமைத்துப் பாடும் புலவருக்கு ஆயிரம் பொற்காசு கொண்ட முடிப்பைத் தருவதாகச், சங்கத்தார் சபையில் தெரிவித்தான். தருமி என்ற சைவ இளைஞன் தன் வறுமை நீங்க அதைப் பெறுதற்காக, ஆலவாய்ப் பெருமானிடம் இரந்து கேட்டான். தருமிக்கிரங்கிய சொக்க நாதப்பெருமான்,

கொங்கு தேர் வாழ்க்கை என்னுஞ் செய்யுளில்

"மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே"

என இறுதியடிகளையுடைய பாட்டைத் தருமிக்கு வழங்கினார். தருமி, அப்பாட்டைப் பாண்டியனிடம் காட்ட, அப்பாண்டியன் தனது கருத்துக் கிசைவாகக் கண்டு, பொற்கிழியைத் தருமிக்கே வழங்க எண்ணினான். அப்பொற்கிழியை தருமி வாங்க வருந்தருணம், நக்கீரரால் தடுக்கப்பட்ட தருமி சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டார். அதுகேட்ட சொக்கர், கோபங்கொண்டு ஒரு பிராமண வடிவத்தை மேற்கொண்டு பாண்டியன் அவையில் வந்து, பொற்கிழி பெறாது தருமியைத் தடுத்தவர் யார்? என, நக்கீரர் நானென எழுந்து பாட்டில் மங்கையர் கூந்தலுக்கு மணமுண்டு எனப் பாடியது பிழையென வாதித்தார். தேவ மகளிர் கூந்தலும், சொக்கநாதர் தேவி கூந்தலும் அப்படியா? என, ஆம், அவருடைய கூந்தலுக்கும் மணமில்லை, என்று கூறவே அந்தச் சிவபிராமணர் தமது நெற்றிக் கண்ணைக் காட்டினார். சிவமெனக் கண்டுமே அடங்காத நக்கீரர்,

"நெற்றிக்கண்ணைக் காட்டி னும் குற்றம் குற்றந்தான்" என்று கூறவே, அப்பெருமானால் "நம்மையும்

பகைத்தனை, நமது தேவியின் கூந்தலையும் நகைத்தனை" குட்ட நோயினாற் பீடிக்கப்படுக, எனச் சாபமிட்டார்.

உடனே கீரனார், தனது பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டலும், அதைக்கேட்ட இறைவன் இரங்கி 'நீ திருக்கைலையைக் கண்டாலே இந்நோய் தீரும் எனச் சாபத் தீர்வுங் கூறினார்.

ஆகவே நக்கீரர் காடு, மலை எல்லாங் கடந்து செல்லும்போது அருகிலேயுள்ள ஒரு நீர் நிறைந்த குளத்தடியில் தங்கினார். தங்கியவர் குளக்கரையிலிருந்து தவஞ்செய்தார். அப்போது மேலே ஓங்கிவளர்ந்த ஒரு ஆலங்கிளையிலிருந்து ஒரு இலை அக்குளத்தில் விழுந்து துடிப்பதைக் கண்டு, தமது தவத்தை இடைநிறுத்தி விட்டுச் சென்று அதைப் பார்த்தார். இலையின் நீரிலாழ்ந்த பகுதி மீனாகவும், மேற்பகுதி பறவையாகவும் ஒன்றையொன்றிழுக்கக்கண்டு அதிசயப்பட்டார். அதனால் அவரது தவத்துக்கு ஊறு உண்டாயிற்று அந்த நிலையில் தவத்திற் பிழைபட்ட தொளாயிரத்து தொண்ணூற்றொன் பதின்மருடன் மேலும் ஒருவரைத் தேடிய பூதமொன்று தவத்திற் பிழைபட்ட நக்கீரரையும் வந்து தனது குகைக்குள் தூக்கிச்சென்று அடைத்தது அதனால் வருந்திய புலவர் தமது தருக்கொழிந்து முருகப்பெருமானை நினைந்து அந்த இக்கட்டிலிருந்து தன்னைக் காப்பாற்றியருளுமாறு திருமுருகாற்றுப்படையைப் பாடத் தொடங்கினார். ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம்,. திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை என்பவற்றைப் பாடிய கீரனார் மேலும் பத்து வெண்பாக்களையும் உருகியுருகிப் பாடினார்.

தன்னை நம்பி அன்புகுழையப் பாடிய நக்கீரரைக் காப்பாற்று முகமாக முருகப்பெருமான் ஓடோடி வந்து, அந்தக் கொடிய பூதத்தைக் கொன்று நக்கீரருடன் அக்குகையில் அடைபட்டிருந்த ஏனையோரையும் விடுதலை செய்தார். எல்லோரும் முருகனை ஏத்தி வாழ்த்திப்பாடி வணங்கினர். முருகப் பெருமான் அவர்களுக்கருள் புரிந்து மறைந்தருளினார்.

அன்று தொட்டுத் திருமுருகாற்றுப்படை பக்தி நூலாகக்கருதி ஓதப்பட்டு வருகிறது. இதன் பெருமை நோக்கிச் சங்கநூலாகிய பத்துப்பாட்டில் முதலாம் பாட்டாகச் சேர்க்கப் பட்டுள்ளது. நல்லூர் ஆறுமுக நாவலர்களும் இந்நூலை உரை விளக்கத்துடன் முன்னரே பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இதில் ஒவ்வொரு படைவீட்டின் சிறப்பையும் படிப்பவர் நன்குணர்ந்து படிப்பின் முருகனருள் நிச்சயம் கிடைக்கும்.

வரலாற்றாசிரியர் திரு குலசபாநாதன் அவர்கள் எழுதிய தமிழ்நாட்டுப்படை வீடுகளில் ஒன்றாக செல்வச்சந்நிதி திருக்கோவிலையும் காட்டியுள்ளார்.

வார்த்தைகள் வெறும் நீர்க்குமிழிகள் செயல்களே தங்கத்துளிகள்

உ

# சங்கரர் ஆர்கொலோ சதுரர்!

கவிஞர் துன்னையூர் சி. செல்லமுத்து அவர்கள்.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்!
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே"

-திருவாசகம்; கோயில் திருப்பதிகம்; 10

**ச**துரர் என்றால் விவேகம் முதலிய புத்திசாதுரியத்தைக் கொண்டவர் என்ற பொருள், இங்கே திருப்பெருந்துறையில் கோயில் கொண்டருள்பாலிக்கும் சிவபெருமானுக்கும், திருவாதவூரடிகளுக்கும் இடையில் பண்டமாற்று வியாபாரம் நடக்கிறது. மாணிக்கவாசகர் தன்னைச் சிவனிடம் கொடுத்துச் சிவனைத்தான் பெற்றுக் கொள்கின்றார். இந்த வியாபாரத்தில் தான் அதிகலாபம் ஈட்டியதைச் சிவனிடம் எடுத்துக் காட்டிப் பெருமைப்படுகின்றார் வாதவூரர்.

இவ்வுடலைப் புழுமலியும் புன்புலாற் குரம்பை என வேறோர் இடத்திலும் இழிவாகக் கூறுகிறார். இத்தகைய இழிந்த உடலைக் கொடுத்துப் பதிலாகச் சிவனைத் தனதுடமையாக்கிக் கொள்கின்றார். ஆனால், இறைவன் கிடைத்தற்கரிய பக்தனொருவன் தனக்குக் கிடைத்ததை எண்ணி மட்டிலா உவகை கொள்கின்றார். இறைவன் மானிடர் போல் "பேரம் பேசும் பேர்வழியல்லர்" என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"எந்தையே ஈசா! எனது உடலைத் தேடி வந்து அதனை விட்டு நீங்காது, என்றும் அதில் வாசஞ் செய்கிறாய். இத்தகைய பெருங் கருணைக்கு ஈடாக உமக்குத் தருவதற்கு எதுவுமில்லையே!" என ஆதங்கப்படுகின்றார் திருவாதவூரடிகள்.

"திருப்பெருந்துறையில் எழுந்தருளி அருள் பாலிக்கும் எந்தையே! பேரின்பம் அருளிய பெருந்தகையே!! என்னை ஆட்கொண்டருளும் திருவருட்செல்வமே!!! நானுமக்குச்

செய்யக்கூடிய பிரதியுபகாரம் ஏதுமிருந்தால் அதனை எனக்கு அருளிச்செய்க!"

இறைவன் ஐந்தொழில் புரிந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிப்ப தென்பது; சிறுபிள்ளை விளையாட் டைப் போன்றது. குழந்தைகள் மணல் வீடு கட்டி விளையாட; ஒருவன் வந்து அதனைக் காலால் சிதைத்து விடு கின்றான். இறைவனின் ஐந்தொழில் களான; படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், அழித்தல் என்பவற்றின் மூலம் ஆன்மாக்களைப் புடம்போட்டு- தகுதி வரப்பெற்றதும் மீண்டும் தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொள்கின்றார்.

"வல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்ல வல்லக் கொல்லவல்ல - பொல்லா வினை போக்க"

இரும்பையோ! தங்கத்தையோ!! நாம் அப்படியே உட்கொள்ள இயலாது; அவற்றை அக்கினியிற் புடம்போட்டுப் பஸ்மமாக்கினால் அது அளப்பரும் ஆற்றலுடன் செயல்புரிந்து உடல் நோய் தீர்ப்பதை நாமறிவோம்.

இத்தகைய செயலை எம்பெருமான் திருவிளையாட்டாகச் செய்து; ஆன்மாக்களைத் தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொள்கின்றார். இந்த உடல் இறைவன் தந்த சொத்து. அதனை நாம் பேணிக்காக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் எண்ணிப்பாராமல் "நான் - எனது" என அகந்தை மமதையுற்றால் உய்வதற்கு வேறு வழியில்லை.

"முத்தி" என்றால் விடுபடுவது (மோட்சம் என்பது அதுதான்) பேரின்ப முத்தியென்பது இறைவனுடன் இரண்டறக்கலத்தல். இது எல்லார்க்குங்கிட்டு வதன்று. இலட்சத்தில் ஒருவர் இத்தகைய பெறலரும்பேறு பெற்றதைச் சிவனடியார்கள் வரலாற்றின் மூலம் அறிகின்றோம்.

இறைவன் திருவருளால் ஐந்தொழிலும்; மலபரிபாகமும்; வீடுபேறும் உரிய நியதிப்படி நிகழ்கின்றன. எம்மை நாம் அதற்குரியவர்களாய் ஆக்கிக்கொள்வதிலேயே எல்லாம் தங்கியுள்ளதென உணர்ந்து; முத்தி பெறும் வழியில் வாழ்ந்தால் என்றோ ஒரு பிறப்பில் நாமெல்லோரும் பிறவாப் பெரும் பேறாகிய பேரின்ப முத்தி பெறலாம். எதற்கும் குருவின் வழிகாட்டல் அவசியம்.

## மனம் அடங்க

மனமானது ஓடித்திரிவதால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அதனை அடக்குவதனாலேயே சுகம் உண்டாகின்றது. கோயில் வழிபாடு, பூசை, யோகம் முதலிய எல்லாவகையான செயல்களும் மனதை ஒருவழிப் படுத்தவே ஆகும்.

உ

# சிறுத்தொண்ட நாயனாரும் பெரியபுராணமும்

திரு த. நாகராசா B.A. அவர்கள்.

**சோ**ழர்கால ஆட்சிவரை காப்பியங்கள் எழுந்தன. சிலப்பதிகாரம், சிவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். ஆனால் தோன்றிய காப்பியங்கள் சமண, பௌத்த காப்பியங்கள். சோழர் கால ஆட்சியில் தான் சைவக் காப்பிய மாகிய பெரியபுராணம் தோற்றம் பெற்றது. அது அறுபத்துமூன்று நாயன்மார் வரலாற்றை எடுத்துக் கூறுகின்றது. இவ் வரலாற்றில் சிறுத்தொண்ட நாயனார் குறிப்பிடத் தக்கவர்.

சிறுத்தொண்டநாயனார் சிவ பெருமான் மீது அளவுகடந்த பக்தி உடையவர். அத்துடன் சிவனடியார் களை அன்புடன் அழைத்து உபசரித்துத் தேவையான பொருட் களும் அமுதும் அளித்து அனுப்பு பவர். இவருடன் இவரது மனைவியும் சேர்ந்து நின்று ஒத்துழைத்ததால் சிறுத்தொண்டநாயனார் சிறப்புப் பெற்றார். வழக்கமாக அன்னம் புசிக்க வரும் சிவனடியார்கள் வரவில்லை கவலை கொண்ட சிறுத்தொண்ட நாயனார் சிவனடியாரைத் தேடிச் சென்றார். இவர் போனபின் சிவபெரு மான் சிவனடியார் வேடத்தில் வருகை தந்தார். அவரைக் கண்டதும் மகிழ்ச்சி யடைந்த மனைவியார் உணவருந்திச் செல்ல வேண்டுமென வேண்டினார். ஆனால் சிவனடியார் வெளியில் செல்கின்றேன். எந்த இடத்தில் இருப்பேனென்று கூறிச்சென்றார். சிவனடியார் எவரும் வரவில்லை எனக்கவலையுடன் வந்த சிறுத் தொண்டர் சிவனடியார் ஒருவர் வந்த தாகவும் அவர் தான் தங்கியிருக்கும் இடத்தைக் கூறிச்சென்றார் எனவும் மனைவியார் கூறியதும் உடனடி யாகவே சிறுத்தொண்டர் அவர் இருக்கும் இடத்தை நாடிச்சென்றார். அச்சிவனடியாரை வீடு வந்து திரு வமுது செய்தருளும்படி வேண்டினார். சிவன் இவரைச் சோதித்தற்காக பிள்ளைக் கறிதான் நான் சாப்பிடுவது என்றார். அத்துடன் பிள்ளையை வெட்டும் போது கவலையடையாமல் வெட்ட வேண்டுமென்று கூறினார். சிறுத்தொண்டரும் மனைவியும் தங்களது பிள்ளையை வீட்டிற்கு அழைத்து வந்து மகனுக்கு உண்மை யெல்லாவற்றையும் கூறி அவனை வெட்டி இறைச்சிக்கறி சமைத்துத் திருவமுது செய்யும்படி வேண்டினர். அத்துடன் உங்களது மகனும் என்னுடன் இருந்து சாப்பிட வேண்டு மென்றார் மனைவி உள்ளதைக் கூறிவிட்டார். இதைக்கேட்ட சிவனடியர் அவர்களது பக்தி நெறியை மெச்சிப் பிள்ளையைப் பழையபடி உயிர்ப்பித்துக் கொடுத் தார்.

எனவே எவரும் செய்யத் துணியாத செயலைச் செய்தது சிவன்

தவறான வழியில் சம்பாதித்தால் தவறான வழியில் செலவழியும்

மீது அளவுகடந்த பக்தி வைராக்கியத்தைக் காட்டுகிறது. பொதுப்படப் பார்க்கும் போது அக்காலச் சமுதாயம் சிவனடியார்களை எப்படி மதித்து வாழ்ந்தது என்பதை அறியக் கூடியதாகவுள்ளது. சிவனடியார்கள் எதைக் கேட்டாலும் கொடுக்கச் சித்தமாயிருந்தார்கள் என்பதை அறியலாம். இப்படியான நிகழ்வு ஒன்று ஏற்படுமானால் இப்பொழுது பெரும் பிரச்சினை மட்டுமன்றி அரசினால் தண்டனையும் கிடைக்கும். ஆனால் சிவனடியாரின் வேண்டுகோளை நிறைவேற்றுவதே அவர்களது பக்திநெறியாக இருந்தது. கண்ணப்பர் எப்படிக் கண்ணைக் கொடுத்து மெச்சப்பட்டாரோ அது போலவே சிறுத்தொண்டரும் மெச்சப்பட்டாரோ? எனவே தான் மனிதன் வாழுகிறான் என்பது முக்கியமல்ல ஒரு குறிக்கோளுடன் வாழ்வதுதான் முக்கியம் என்பதைச் சேக்கிழார் பெருமான் எடுத்துக் காட்டுகின்றார். அத்துடன் செயற்கரிய செய்கையைச் செய்தது போல இறைவனது சோதனையில் சிறுத்தொண்டரும் மனைவியும் வெற்றி பெற்று விட்டார்கள்.

எனவே தற்கால இளைஞர் சமுதாயத்தினர் எங்களது சைவக் கலாச்சாரத்தைப் பாதுகாக்கச் சிறுத்தொண்டனின் பக்திநெறியைப் பின்பற்ற வேண்டும். அத்துடன் கல்லூரிகளில் சிறுத்தொண்டநாயனார் குருபூசை அவரது சிறப்பு, பக்தி என்பவற்றை இயன்ற வரை செய்யவேண்டும். ஆனால் தற்பொழுது பெரிய கல்லூரி என்றால் என்ன சிறிய கல்லூரி என்றால் என்ன பேதம் காட்டாமல் சைவவிழாவினை அல்லது பிரார்த்தனைகளைச் செய்ய வேண்டும். பெரும்பாலான மாணவ சிறார்களுக்கு தேவார திருவாசகம் தெரியாது. இப்படி விட்டுச் சென்றால் சைவக் கலாச்சாரம் வீழ்ச்சி அடைய வேண்டிய நிலை ஏற்படும்.

## அகத்தில் கடவுளைக் காண

கடவுள் அகக்காட்சியில் காணத்தக்கவர். ஆனால் அப்பரமபதி உன் அகக்காட்சியில் தோன்றவில்லை. தோன்றாமையால் இல்லை என்று கூறாதே. கலங்கிய தண்ணீரில் சந்திரனுடைய தோற்றம் தோன்றாது. அதனால் சந்திரனே இல்லை என்று கூறுவது அறிவுடைமையாகுமா?

உன் உள்ளம் கோபம், சூது, வாது முதலியவற்றால் கலங்கி இருப்பதனால் பரம்பொருளின் காட்சியைக் காண முடியவில்லை. ஆனபடியால் உன் உள்ளம் தெளியட்டும்.

தோற்றாங் கொட்டை கலங்கிய நீரை தெளியவைக்கிறது. இறைவனுடைய திருமந்திரம் உன் உள்ளத்தை தெளிவடையச் செய்யும்.

நேருக்கு நேர் பேசினால் உண்மை வெளியாகும்.

உ

# அடியைப்போல அண்ணன், தம்பி உதவார்

திரு நா. நல்லதம்பி அவர்கள்.

அடி, பாதம், தாள், கழல் என்பன ஒரு பொருட் பல பெயர்ச் சொற்கள். மேலும், அடி என்பது நீட்டலளவைப் பெயர்சொல்லாகவும். அடி என்னும் ஏவல் வினைச் சொல்லாகவும், அடித்தான் என்ற வினை முற்றுச்சொல்லின் பகுதி யாகவும் வரும்.

நாம் இறைவனை வணங்கும் போது, அவனது திருவடிகளையே பெரும்பாலும் தியானிக்கிறோம்.; வணங்குகின்றோம்; போற்றுகின்றோம். திருவடிகளிலேயே மலர்தூவி வழிபடுகின்றோம். இதனால், இறைவனுடைய திருவடிகளே எமக்கு முக்கிய பொருளாக இருக்கின்றன.

இறைவனது திருவடிகளை வணங்குபவர்கள் 'அடியார்களள" எனப் பெறுகின்றார்கள்.

இறைவனது திருவடிகளை வணங்கியவர்கள் திருவாதவூர் அடிகள், இராமலிங்க அடிகள், குன்றக்குடி அடிகள் ஆகியோர்.

இறைவனது திருவடிகள், பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடப்பதற்கு உற்ற தெப்பமாக விளங்குகின்றன. அந்தத் திருவடிகளை நாம் சேர்ந்துவிட்டால் பிறவிக் கடலைக் கடக்கலாம். சேராதவர் கடக்கமாட்டார் என்று தெய்வப்புலவர் கூறுகின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடி சேரா தார் (குறள்10)

மேலும் அவர் இறைவனது அடியைச் சேர்ந்தவர், "நிலமிசை நீடு வாழ்வார்" என்றும், அவர் 'மனக் கவலையின்றி' இருப்பர் என்றும் அவருக்கு "என்றும் இடும்பை இல்லை" என்றும் சொல்லியிருக்கிறார்.

இறைவன் தன்னை வணங்கும் அடியார்களுக்குத் திருவடி தீட்சை கொடுத்து ஆட்கொள்ளுகிறார் என்று நமது சைவ சமயம் கூறுகின்றது. "புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே" என்று ஒரு நாயனார் இறைவனைப் போற்றியுள்ளமை காணலாம்.

திருவாதவூர் அடிகள்,

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"

என இறைவன் தாள்களுக்கு வாழ்த்துச்சொல்லி,

மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சே வடி போற்றி
ஏகன் அநேகன் இறைவன் அடி போற்றி
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி போற்றி

என்று இறைவனது அடிகளுக்கு வணக்கம் செலுத்துவதைப் பார்க்கின்றோம்.

"மூவுலகும் ஈரடியால் அளந்த" "உலகளந்த பெருமாளின்" அடிகளுக்கு வணக்கம் என்றும் "பஞ்சவர்க்கு தூது நடந்த" பரந்தாமனின் அடிகளுக்கு வணக்கம் என்றும் துதிக்கப்பெறுகின்றது.

இங்கே மூலப்பொருளின் பெயரைக் குறிப்பிடாமல் அவனின் உறுப்புக்கு அல்லவா வணக்கம் செய்யப் பெறுகிறது. ஏன்? அங்கே தொழிற்பட்டது "அடிகள்" என்பதனால் அன்றோ! "நடந்த கால் சீதேவி" என்று முயற்சி செய்பவர்களையும் "இருந்த கால் மூதேவி" என்று முயலாமல் இருப்பவர்களையும் சொல்வதுண்டுதானே!

மேலும், பாரதப் போர் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகிவிட்ட நிலையில், துரியோதனனும், அர்ச்சுனனும் கிருஷ்ணரிடம் உதவி கேட்டுப்போகிறார்கள். அந்நேரம் அறிதுயிலில் ஆழ்ந்திருக்கின்றான் கண்ணன். வணங்காமுடியோனான துரியோதனன், கண்ணனது தலைமாட்டில் காத்திருக்கிறான். பின்னர் சென்ற அர்ச்சுனன் கால்மாட்டில் இருக்கிறான். கண் விழித்த கண்ணன், திருவடிப்பக்கம் இருந்த அர்ச்சுனனை இயல்பாக முதலிற் பார்க்கிறான். வந்த அலுவல் என்ன என்று கேட்கிறான். போரில் உதவி செய்கிறேன் என்று அர்ச்சுனனுக்குக் கூறிவிட்டுத் திரும்பித் துரியோதனனிடம் பேசுகிறார். முதலிலே அர்ச்சுனனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேனே என்று கூறிய கண்ணன் படைக்கலங்களை அவனுக்கு எதிராகப் பாவிக்கப்போவதில்லை என்று கூறி வழியனுப்பி வைக்கிறார்.

இங்கேயும் பரந்தாமனது பாத விசேடம் தெரிகிறதல்லவா!

அன்றியும், பதினெட்டாம் நாட் போர் நடைபெறும் பொழுது, பார்த்தனுக்குச் சாரதியாகப் பணிபுரிகின்றான் பார்த்தசாரதி.

கர்ணன் நாகாஸ்திரத்தை ஏவப்போகிறதருணம் வந்துவிடுகிறது. நாகக்கணையை ஒரு முறைதான் பிரயோகிப்பான் என்றாலும் அதற்குத் தப்புவதென்பது இயலாத காரியம். ஆயினும் அர்ச்சுனன், கண்ணனது கழலிணைகளிலேயே பற்று வைத்துக் கடமையைச் செய்துகொண்டிருக்கிறான்.

உங்கள் உள்ளம் உயர்ந்தால் உங்கள் உயர்வை தடை செய்ய முடியாது

இதோ, கர்ணன் விட்ட நாகாஸ்திரம். அர்ச்சுனனது கழுத்தைக் குறிபார்த்து வருகிறது. கண்ணபிரானுடைய திருவடி செயற்படுகிறது. பெருவிரலால் தேரைச் சிறிது அமுக்குகிறார் பெருமாள். தேர் கீழ்நோக்கிப் பதிந்து போக, கழுத்துக்கு நேராக வந்த அம்பு முடியைத் தட்டிக்கொண்டு போய்விடுகிறது. இனிமேல் இரண்டாம் முறை நாகக்கணை வரமாட்டாது. அர்ச்சுனனுக்கு இனிமேல் எந்த ஆபத்தும் இல்லையென்றாகிறது.

இங்கே, அர்ச்சுனனை அந்த ஆபத்திலிருந்து காத்தது கண்ணபிரானது "அடி" களே யாம். அண்ணன்மாரான தருமன், வீமன் இருவரும் உதவிக்கு இல்லை; தம்பிமாரான நகுல சகாதேவரும் உதவிக்கு வரவில்லை. அந்த சம்பவத்திலே, "அடியைப் போல அண்ணன் தம்பி உதவார்" என்ற பழமொழி தோன்றியிருக்கலாம். அன்றியும், பெரிய ஆபத்துவரவிருந்த சமயத்திலே சிறிய கஷ்டத்தோடு நாம் தப்பிவந்தால், "தலைக்கு வந்தது முடியோடு" போய்விட்டது என்று சொல்லும் பழமொழியும் இச்சந்தர்ப்பத்திலிருந்துதான் தோன்றியிக்கும் என்பதும் பெற்றாம்.

எனவே, 'அடி' என்பது இங்கே தண்டனையைக் குறிக்கவில்லை என்பதும் அந்த 'அடி' இறைவனது 'பாதமே' என்பதும் விளக்கமாகிறது.

மின்னெறி சடாமுடி விநாயகன் அடி தொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே

என்று ஔவை மூதாட்டி, விநாயகனின் 'அடி' யில் நம்பிக்கை வைத்து நன்னெறி வெண்பா நாற்பதையுமன்றி, வேறுபல நூல்களையும் பாடி நமக்குத் தந்தது போல, நாமும் இறைவனது அடிகளைத் தொழுதுகொண்டு கற்க வேண்டிய நூல்களை நன்கு கற்று வாழ்வோமாக. இறைவனது "அடியைப் போல அண்ணன் தம்பி உதவார்" என்பதையும் மனத்திற் கொள்வோமாக.

பிடியதன் உரு உமை கொள மிகு கரியது
வடி கொடு தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலமுறை இறையே.

(தேவாரம்)

## தவத்தால் சிவம்

சரியை கிரியை யோகங்களைச் செய்தல் மெய்த்தவமாகும். தவத்தைச் செய்வோரே சிவத்தைச் சார்வார். நித்த, அநித்த வேறுபாடுகளை உணர்ந்து அறஞ்செய்தல் வேண்டும். அறத்தால் அன்பு விளையும். அன்பினால் அருள் விளையும். அருளால் தவம் சித்திக்கும். தவத்தால் சிவமும் கைகூடும்.

உ

# "துன்பம் நீங்க"

**கலாபூஷணம் டாக்டர் இரா. சிவஅன்பு அவர்கள்.**

உலகிலேயுள்ள உயிரினங்களிலெல்லாம் தலைசிறந்தவன் மனிதன். "அரிது அரிது மானுடராதல் அரிது" என்றார் ஔவையாரும் இந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். ஆனால் ஒரே ஒரு விடயத்தில் மாத்திரம் சகலரும் ஒரே மாதிரித்தான். அது என்ன?. "துன்பம் இல்லாமல் வாழ வேண்டும்" என்பதில் சகலரும் ஒரே கருத்துடையவர்களாயுள்ளனர். ஆனால் அதற்கு வழி தெரியாமல் திண்டாடுகின்றனர். இதற்கு சுலபமான வழியை அருணகிரிநாதப் பெருமான் கூறியுள்ளார்.

ஒரு மனிதனுக்குத் துன்பம் இருவகையாக வரும். ஒன்று மனத்தினால் வரும் துன்பம். மற்றொன்று உடலால் வரும் துன்பம். பசி, பிணி போன்றவை. உடல் நோயுற்றாலும் ஒருவன் மனத்தில் தென்பாக இருப்பானாயின் உற்சாகமாக, சுறுசுறுப்பாக இருப்பான். ஆகவே முதலில் மனத் துன்பத்திற்கு மருந்து கூறுகின்றார். *சிந்திக்கிலேன்* என்றார். பல்வேறு உலகியல் எண்ணங்களில் மூழ்கித் துன்புறுகின்றோம். எண்ணங்கள் ஒன்றா?, இரண்டா? ஓராயிரம்! பிறவிப் பிணிக்குக் காரணம் எமது ஆசையும் அதைச் சார்ந்த எண்ணங்களும் தானே! திருக்கைலையிலே சுந்தரர் மலர் கொய்யும்போது ஒரு கணநேரம் அநிந்திதை, கமலினி ஆகியோரைக் கண்டு சிறிது எண்ணந்தடுமாறினார். அதன் விளைவு பூலோகத்தில் வந்து சுந்தரமூர்த்தி நாயனாராகப் பிறந்தார். குபேரன் காயாவனம் என்கிற அழகிய ஸ்தலத்திலே சிறிது நாட்கள் தங்க வேண்டுமென்று எண்ணினான். அதற்காக ஒரு பிறவியே கிடைத்தது. பட்டினத்து அடிகளாக அவதரித்தார்.

''ஊரானந்தம் பெற்ற பேரானந்தம் சுற்றம் உறவானந்தம் உடலனந்தம் செய்யும் வினை யனந்தம் வினையினால் கருத்தோ அனந்தம்" பிறப்புக்களை தவிர்க்க வேண்டுமானால் சிந்தனையை குறைக்க வேண்டும். ''மனமே ஒன்றையும் நினைக்காதே" என்று நாம் கட்டளையிட்டால் அத்தருணம் பார்த்து அதிக எண்ண பேதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே பலப்பல எண்ணி அவதியுறும் மனத்தை இறைவன்பால் திருப்பி விட்டால் அது சாந்தமுறும்.

"சிந்தனை நின்றனக்காக்கி" என்பார் மணிவாசகர். "சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்" சேரமான் பெருமாள் நாயனார். இறைவன் பற்று இறுக, இறுகப் பிறப்பற்றுக்கள்

கழன்று விடும். தூங்கினவன் கைப் பொம்மை நழுவி விழுவது போல இறைவனை சிந்திக்க சிந்திக்க ஏனைய சிந்தனைகள் நீங்கும். அப்பேற்பட்ட சிந்தனைகளால் விளையும் தீய வினைகளும் நீங்கும். அதே போல அந்த வினைகளால் விளையும் துன்பம் நீங்கப் பேரின்பம் ஊற்றெடுக்கும். ஆகவே வடிவேலிறைவனின் தண்டைச் சிற்றடியைச் சிந்தித்து எமக்கு மனத்தினால் விளையும் துன்பம் நீங்கி இன்பம் பெறுவோம்.

அதே போல் உடம்பால் ஏற்படும் துன்பம் நீங்க வழியுண்டா? என்றால் உண்டு என்கிறார் அருணகிரிநாதர். "நின்று சேவிக் கிலேன்" என்கிறார்.

இறைவனுக்குத் தொண்டுகள் செய்வது, சேவைகள் புரிவது உடலாற் செய்யும் சரியைத் தொண்டுகள். இதன்மூலம் உய்வு பெற்றார் திருநாவுக்கரசு நாயனார். நாம் அன்னதானம் செய்யும்போது எல்லோரிலும் இறைவனைக் கண்டு மகிழ்ந்து பூஜித்து வழங்குகின்றோம். அந்த அரிய சேவையில் எம் ஆணவம், அகங்காரம் எல்லாம் கரைந்து விடுகின்றது. ஆகவே சேவைகள் செய்வதன்மூலம் புண்ணியம் விளைகின்றது. நல்வினை சேர்கிறது. அதன் பயனாக உடல் துன்பங்கள் மறைகின்றன. இன்பம் அடைகிறோம். அவ்வாறாக உடல் துன்பமும் போக்கிவிடலாம் என்றார் அருணகிரிநாதர். முருகா புந்திக் கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே, உன்னைச் ***சிந்திக்கிலேன்*** நின்று ***சேவிக்கிலேன்*** நின் தண்டைச் சிற்றடியை ***வந்திக்கிலேன்:- வணங்குகின்ற*** முறை தெரியாது தடுமாறுகின்றோம். பூஜைமுறைகள் தெரியாத ஒருவன் பல ஸ்துதிகளால் அந்த முருகன் புகழ்பாடி வாழ்த்தலாம் தானே. அதுவும் இயலாதவன் ஒவ்வொரு சந்தி பூஜையிலும் சென்று அந்த முருகனைக் ***கண்குளிரக்*** காணலாம் தானே. சோம்பேறியாகத் தூங்கிவிட்டு, பெருமைக்கு நாள் தவறாது ஆறுகாலப்பூசையிலும் கலந்து சிறப்புப்பெறுகிறேன் என்று பொய் பேசுகின்றனர் சிலர். இந்தப் பொய்யை ***நிந்திக்கலாம்*** தானே. உண்மையைச் ***சாதிக்கலாம்*** தானே.

இப்படி, இத்தனை வழிகளையும் கூறி, இவற்றை நாம் கடைப்பிடிக்க முயன்றால் முருகன் திருவருள் பெற்று எம் உடல், உள்ளம் ஆகியவற்றிற்கு ஏற்படும் துன்பத்தைப் போக்கலாம் என்பதை அருணகிரிநாதசுவாமிகள் கீழ்வரும் கந்தரலங்காரத்தின் மூலம் வெகு சிறப்பாகவும் எளிமையாகவும் எமக்கு உபதேசித்தருளுகின்றார்.

சிந்திக் கிலேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேனென்றும் வாழ்த்துகி லேன்மயில் வாகனனைச்

சந்திக் கிலேன் பொய்யை நிந்திக்கி லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே!

புந்திக்கிலேசம் - மனோவேதனை

காயக்கிலேசம் - உடலுக்கு வரும் பிணி முதலியன.

துன்பம் நீங்க அருணகிரியார் கூறும் வழிகள்

1) எந்தை கந்தவேளை சிந்தித்தல்
2) அவனைச் சேவித்தல்
3) அவனை வணங்குதல்
4) அவனை வாழ்த்துதல்
5) அவனை கண்குளிரக் காண்டல்
6) பொய்யை நிந்தித்தல்
7) சத்தியத்தை சாதித்தல்

இவற்றில் ஒன்றையாவது கடைப்பிடித்து உய்வு பெறுவோமாக.

## "சந்நிதி வேலா"

தேடிவரும் அடியவர்க்குத் தேனமுதம் தினமளிக்கும்
சந்நிதி வேலா சரணம் நீயே
ஆற்றங் கரையினிலே வீற்றிருந்து - முருகா
அடியோரை ஆனந்த வெள்ளத்திற்றிளைக்க வைப்பாய்
கேட்ட வரத்தினைத் தந்திடுவாய் - முருகா
கெட்டோரைப் பூண்டோடு அழித்திடுவாய்
ஆறுமுக வேலவனாய் நீயிருப்பாய் - முருகா
ஆறாத் துயர் கொள்ளும் அடியார்க்கு அருள் புரிவாய்
தொண்டைமானாற்றிலே மூழ்கியெழ - முருகா
துன்பம் காற்றாய்ப் பறந்தோடிப் போகுதையா
உன் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரிக்க - முருகா
இன்பம் ஆறாய்ப் பெருக்கெடுத்து வருகுதையா
காற்றில் அருணகிரி கீதம் இசைக்க அதைக்
கேட்டு மகிழ்ந்திட்ட முருகா
உன் காலைப் பிடித்து நாம் வேண்டுகிறோம்.
காப்பாற்ற வந்துவிடு சந்நிதி வேலா
செல்வச் சந்நிதி வேலா.

ஜெ. ஜெயமாருதி
தரம் - 7
கிளி/ இராமநாதபுரம் ம.வி.

அத்தியாயம் - 86 உ (தொடர்ச்சி....

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# பீஷ்மரின் இறுதிக்காலம்

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்.

பீஷ்மர் எதிர்பார்த்துக் காத்திருந்த உத்தராயணம் வந்தமையால் யுதிஷ்டிரர் அந்தணர் பலரையும் அழைத்துக்கொண்டு, பிதாமகர் பீஷ்மருக்கு இறுதிக் கிரியைகள் செய்வதற்குரிய நெய், பூமாலை வகைகள், நறுமணப்பொருட்கள், பட்டுப்பீதாம்பர ஆடைகள், சந்தனம், அகில் முதலான பல்வகைத் திரவியங்களையும் தயார்ப்படுத்தி எடுத்து வரச்செய்து, பீஷ்மர் இருக்குமிடத்தை அடைந்தார். பீஷ்மரை அணுகி அவரை வணங்கி, ''பிதாமகரே தங்கள் கட்டளையை நிறைவேற்றும் வண்ணம், யானும், எனது சகோதரர்களும், தங்களது புதல்வனாகிய திருதராஷ்டிர மன்னனும், அந்தணப் பெரியோர்களும் சிறந்த மேன்மையுடையவரான கண்ணபிரானும், மற்றும், அரசர்கள் அஸ்தினாபுரத்து குடிமக்கள் அனைவரும் தங்களைத் தரிசிக்க வந்திருக்கிறோம். தாங்கள் கட்டளையிட்டபடி அனைத்துத் திரவியங்களையும் சிறந்த முறையில் சேகரித்துக் கொண்டு வந்திருக்கிறேன். இனி யான் என்ன செய்ய வேண்டுமெனக் கட்டளையிடுங்கள். செய்யச் சித்தமாக உள்ளேன்'' என்று கூறலானார்.

யுதிஷ்டிரரின் உரைகளைச் செவிமடுத்த பிதாமகர் பீஷ்மர், கண்களை விழித்துத் தன்னைச் சுற்றிச் சூழ நிற்கும் பரத வம்சத்தினர் அனைவரையும் பார்த்தார். பின்னர் யுதிஷ்டிரரை நோக்கி "மைந்தனே! மந்திரி முதலானோருடன் அனைவரையும் நீ அழைத்து வந்துள்ளமை கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். சூரியபகவான் உத்தராயணத்துக்கு வந்துவிட்டார். நான் இந்த அம்புப் படுக்கையில் படுத்து இன்றோடு ஐம்பத்தெட்டு நாட்கள் ஆகின்றன. புண்ணியமான மாசி மாதம் வந்து விட்டது. எனவே நான் இனி உங்களிடமிருந்து பிரியப்போகிறேன்.'' என்று கூறியவராய் மன்னன் திருதராஷ்டிரனை நோக்கலானார்.

திருதராஷ்டிரனை விளித்து "மன்னா நீ தருமங்கள் அனைத்தும் தெரிந்தவன். அரசியல்க் கருமங்கள் யாவற்றையும் நன்கு உணர்ந்தறிந்தவன். மறைகளையும் சகல சாஸ்திரங்களையும் கற்றவன். எது நடக்க வேண்டுமோ அது நடந்திருக்கிறது.

அதனைச் சிந்தித்து நீ துயரப் படக்கூடாது. பாண்டுவின் புதல்வர்கள் உனக்கும் புத்திரர்களே. பெரியவர் களை மதித்துப் பணிவிடை செய்யும் நற்பண்புள்ள அவர்களை அறத்தின் வழியில் நடந்து அவர்களை நீ காப்பாற்ற வேண்டும். யுதிஷ்டிரன் தர்மசீலன், நீ இடும் கட்டளையை அவன் சிரமேல் ஏற்று நடப்பான். பிறருக்கு மனதாற் கூட தீங்கு செய்ய நினைக்காதவன் அவன். எல்லோரிட மும் அன்பும் தயையும் உடையவன் யுதிஷ்டிரன். உனது புதல்வர்கள் கோபமும் பொருளாசையும் உள்ள வர்கள். பொறாமையினால் ஒழுக்கம் குன்றி நடந்தவர்கள். அவர்களை இட்டு நீ வருந்தக் கூடாது என்று அறிவுரை பலவற்றைக் கூறலானார்.

பின்னர் கிருஷ்ணபரமாத் மாவை நோக்கிப் "பகவானே! தேவர் முதலான அனைவராலும் வணங்கப் படும் மேன்மை மிக்கவரே! தங்களை நான் இறுதியாக வணங்கிக் கொள்கிறேன். திருமாலாகிய தாங்கள் மானுட தேகம் தாங்கி இம் மண்ணுல கில் அவதரித்திருக்கிறீர்கள். உங்கள் பாதங்களையே தஞ்சம் என்று பக்தி செய்து வாழ்ந்து வந்த என்னை ஆசீர்வதித்துக் காப்பாற்ற வேண்டும். எனக்கு தாங்கள் விடை தரவேண்டும். சுவாமி தங்களை நம்பியிருக்கும் பாண்டவர்களைக் காப்பாற்ற வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன். வாசுதேவர் எங்கு இருக்கிறாரோ அங்குதான் தர்மமும் வெற்றியும் இருக்குமென்று நான் பல தடவைகள் துரியோதனனுக்குக் கூறி இருக் கிறேன். அவன் தனது அறியாமை யினால் நான் எடுத்துரைத்தவை களைச் செவிமடுக்காது பூமியையும் இழந்து முடிவில்த் தானும் அழிந்து போய் விட்டான். கண்ணா! எனக்கு விடைதாருங்கள். தங்களின் பேரருளால் நான் நற்கதியடைய அருள் பாலிப்பீராக" என்று வேண்டிக் கொள்ளலானார்.

பீஷ்மரின் வேண்டுதலைச் செவிமடுத்த கண்ணபிரான் "பீஷ்மரே உமக்கு நான் விடைதருகிறேன். நீர் வசுக்களுடன் சேர்ந்து கொள்வீராக. மார்க்கண்டேயர் போன்று நீரும் தந்தையிடம் பக்தி செலுத்திய படியால் இயமன் உமது சேவகனாகி விட்டான். நீர் மகிழ்ச்சியுடன் விண் ணுலகில் இருப்பீராக!" என்று பீஷ்மரை ஆசீர்வதித்தார். கண்ண பிரான் அனுமதி வழங்கியதும், பீஷ்மர் தன்னைச் சூழ நின்றவர்கள் அனை வரையும் நோக்கி "நான் உயிரை விடப்போகிறேன். நீங்கள் எல்லோரும் அதற்கு மனமுவந்து விடை தாருங் கள். நீங்கள் எல்லோரும் சத்தியத் தையே நாடுங்கள். சத்தியம் தான் சிறந்த பலம். எப்பொழுதும் மனதைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும். பிறர்பால் கருணையுள்ள வராய் இருத்தல் வேண்டும். தர்மத்தையும் தவமுயற்சியையும் ஒரு போதும் கைவிடக்கூடாது. சான்றோர் களை நேசித்து அன்பு செலுத்த வேண்டும். அவர்களின் அறிவுரை களின்படி உங்கள் வாழ்க்கையை

வாழப் பழகிக் கொள்ளுங்கள்" என்று பொதுவான சில அறிவுரைகளை எடுத்துக்கூறி மௌனமாகவிருந்தார். சிறிது நேரத்தின் பின் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். அவரின் மூச்சு மேல்நோக்கிச் செல்லத் தொடங்கியது. இவ்வாறு அவரின் மூச்சு செல்லத் தொடங்கிய சிறிது நேரத்தின் பின் தலையின் உச்சியில் இருந்து ஒளி பிறந்து வெளியேறி ஆகாயத்தை அடைந்தது. இவ்வாறு மகோன்னதமான முறையில் பீஷ்மரின் ஆத்மா பிரிந்து விண்ணை அடைந்தது. ரிஷிகளும் முனிவர் களாக விளங்கும் பெரும் தபோதனர் களும் இறப்பை ஏற்றுக் கொள்ளும் முறையில் பெருமை மிக்க தியாக சீலனாகவும், காமவீரனாகவும் வாழ்ந்த பிதாமகர் பீஷ்மர் தனது இறப்பை ஏற்றுக்கொண்டார்.

இதன் பின்னர் பாண்டவர்கள் விதுரர் முதலானோர் செய்யவேண்டிய கிரியைகள் அனைத்தையும் முறைப் படி செய்து பீஷ்மரின் இறுதிக் கிரியைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வைத்தனர். பின்னர் கங்கைக் கரையை அடைந்து கங்கையின் புதல்வனாகிய பீஷ்மருக்கு நீர்க்கடன் முதலானவற்றை விதிப்படி செய்து முடித்து மனதில் வெறுமை சூழ்ந் தவர்களாய் எவ்வித ஆரவாரமும் இன்றி அஸ்தினாபுரியை அடைந்தனர்.

பீஷ்மர் தனது இறுதிக் கூற்றுக்களாக எடுத்துக் கூறியவை களை நாம் மீண்டும் ஒரு முறை சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். "சத்தியத்தைக் கடைப்பிடியுங்கள். தருமத்தையும் தவத்தையும் கை விடாதீர்கள். சான்றோரை அடுத்து அவர் வழிகாட்டலில் வாழுங்கள்" இவற்றை மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டும். இன்றைய உலகின் நிலை என்ன? ஏன் இப்படியான அவலங் களும், ஒழுக்கக் கேடுகளும், பண்பாட்டுச் சிதைவுகளும் ஏற்படு கின்றன? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக நாம் இருக்கின் றோமா? சூழ்நிலையும் கால வேறு பாடும் காரணம் என்று கூறி எம்மை நாமே மாற்றிக் கொள்ள முயற்சி செய்து மாறுதல் ஏற்படுத்துகிறோம். சான்றோர் அறிவுரைகளைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. சத்தியம் என்பதும் உண்மை, நேர்மை, ஒழுக்கம் என்பன எல்லாம் எழுத்தளவில் இருக்கிறதே அல்லாது செயல் முறையில் இருக்கிறதா என்று நோக்கினால் விடை பூச்சியமே. உண்மைக்கு மதிப்பில்லை. மூத்தோர் மொழிந்தவற்றை ஏற்பதில்லை. தவம், தானம் என்பதில் அக்கறை இல்லை. வழிபாடு, பூஜை என்பனவெல்லாம் சம்பிரதாயமாக நடைபெறுகிறதே அல்லாமல் உளப்பூர்வமான வழிபாடு கள், அறச்செயல்கள் என்பன குறைவாக நடைபெறுகிறது. இவையே இன்றைய சூழ்நிலையில் சாத்தியம் என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இதன் விளைவுகளே இன்றைய சமுதாயச் சீரழிவுகளாகும்.

உண்மையையும், கடவுளையும் முழு மனதாக ஏற்றுக் கொண்டு நடப்போமானால் எவ்வித இடரும் இருக்க மாட்டாது. எமது வாழ்வும் வளம் பெறும் என்பதனை நாம் உளப் பூர்வமாக ஏற்றுக் கொள்வோமாக.

(தொடரும்..

## ஆண்டு எட்டை ஆயிரத்தெட்டாக்கி மல்கும் ஆறுமுகன் திருத்தாள் வாழிய! வாழியவே!!

கலைமணி க. தெய்வேந்திரம் A.I.J.P.

ஆண்டெட்டுற்று அளகாபுரியாளும் பானுகம் பனோதும் ஞானச்சுடர்ச்சந்நிதியே
அரசன்குளக்கோட்டன் அணியிலங்கித் தொண்டையுறும் அலைகடற்பொருந்தியே
ஆச்சார மந்திரத்தில் அஷ்டோத்தரமுழங்கிமல்கும் பூரணத்திருநிதியே
ஆதார மூலமே அருட்பெருஞ்சோதியே தேவாரபோதமே சிறப்புடன் வாழிய!
- வாழியவே!!

பாமாலை, பூமாலை பணிந்தருள்சிவந்த பாதத்தைத் தேனொழுகக்கண்டுற்றதேவ
பக்தனாம் வேதியர்வழிவந்த சாமியார் ஆச்சிரமப்பணி, புகழ்நற்சேவைதிகழப்
போதமாய் ஞாலத்திற்புகழ் கொண்டுற்றோதும் சைவத்திருப்பணிகளோங்கிப்
பாகமாய்ப் பணிந்துய்க்கும் திருவோலக்கத் திருவுலாச்சுடரேயென்றும் நீடுவாழிய
வாழியவே

சோதியாய் நடுவேநின்ற சுடர்விளக்கொளியே சுப்பிரமணியனே
சொப்பனத்துழலும் வாழ்வைச் சுருக்கியே வீடுகாட்டியருளும் மெய்யப்பனே
எப்பொருள் யாதும் வேண்டேன் எடுத்தவிப்பிறவிநீக்கும் நற்கதி ஞானச்சுடரானே
எய்தவிப்போக வாழ்வு இடுக்கியே முடிக்கவந்த மெய்ஞ் நெறிச்சுடரே நிதம்
வாழிய வாழியவே

ஆசிப்பெருக்கால் ஆண்டொன்றும் அஷ்டோத்தரபூசை நூற்றெட்டாகியுயர்ந்து
காணும்

ஆயிரத்தெட்டு நாவோத்தரகிரியை சால்புறநீண்டுமேவும் சந்நிதிஞானமே- தூய
ஆச்சிரம, சைவ கலைப்பண்பாட்டுப் பேரவைக்குழாம்கூடும் நற்சேவையாண்டும்
- சேர

அங்கைமலர்தூவித் தூவித்தெய்வ அழகனை யார்த்திகாணும் செங்கமலப்பாதம்
- பணிந்து போற்றி வாழிய வாழியவே.

உ

# சிவ தத்துவம்

திரு கு. நவரத்தினராஜா அவர்கள்.

ஐம்பெரும் பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய அனைத்திலும் நீக்கமற நிறைந்து நிற்பவன் மட்டுமன்றி எல்லாமே ஒன்றாகத் தாமே விளங்குகிறார் சிவபெருமான் என்கிறது திருவாசகம்.

"பாரிடை ஐந்தாய்ப் புரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

திருமந்திரத்தில் திருமூலர் எண்வகைப் பொருள்களையுமுணர்ந்து "அட்ட மூர்த்தமாய்த்" திகழ்கின்றவனே சிவபெருமான் என்கிறார்.

இந்த உலகத்தில் நாம் கூறுகின்ற ஒவ்வொரு பொருளும் சிவபெருமானின் அம்சமேயாகும். சூரியன், சந்திரன், மழை, விண், காற்று, ஒலி, ஒளி என்றெல்லாம் ஒவ்வொன்றையும் கூறுகின்றோமே இவையனைத்திலுமே நிறைந்து நீக்கமற இருப்பவன் சிவபெருமான்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆண் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சந்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

என்று போற்றிச் சிறப்பிக்கிறது 'திருக்கைலைப் போற்றித் திருத்தாண்டகம்'

ஆகவே வேதங்கள் மட்டுமன்றி, உபநிடதங்களும் போற்றித் துதிக்கின்ற உண்மைப் பொருளான - உயர்ந்த பொருளான 'சிவத்தை' எப்போதுமே மனத்தில் தியானம் செய்து வந்தால் அவனருள் நிச்சயம் கிடைக்கும் என்பது ஆன்றோர்களின் வாக்காகும்.

நாம் வையகத்தில் வாழவேண்டிய முறைகளை விளக்குகிறது சிவ சொரூபம். சிவபெருமானது ஜடாமுடியில் சிவபெருமான் வைத்திருக்கும் சந்திரன் வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் மாறி மாறி வரும் என்பதை வளர்பிறை, தேய்பிறை மூலம் விளக்கிக்காட்டுகிறது. தலையில் இருக்கும் கங்கை, மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை விளக்கிக் காட்டுகிறது. கங்கையில் எவ்வளவு அசுத்தம் சேர்ந்தாலும் அதன் தூய்மை கெடுவதில்லை. அதைப்போல எவ்வளவு தீமைகள் நம்மை அண்டினாலும் நம் மனம் கெட்டுவிடக் கூடாது.

நம்மைச் சுற்றிப் பாவக்குழி நச்சுப்பாம்பாக, ஆலகால விஷமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால், விஷம் உள்ளே இறங்க விடக்கூடாது. இதைச் சிவபெருமானின் கழுத்தில் உள்ள பாம்பும் ஆலகால விஷமும் எடுத்துக்காட்டுகின்றன.

எம்பெருமான் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொன்றாக நின்று அருள் தரக்கூடியவனாவான். ஒரு சமயத்தில் சிவன் சூரியனாக இந்த உலகத்து மக்களுக்கு ஒளியை வாரி வழங்குவான். இன்னொரு சமயத்தில் மழையாகப் பொழிந்து உலகத்தின் வறுமையைப் போக்கி மகிழ்வான். இன்னொரு சமயத்தில் பூரண சந்திரனாக வானத்தில் மிதந்து மக்களுக்கு மகத்தான மன அமைதியை ஏற்படுத்துவான்; இன்னொரு சமயத்தில் காற்றாக வீசி இந்த உலகத்து மக்களையெல்லாம் வாழ வைப்பான்; இன்னொரு சமயத்தில் திருமாலாக விளங்குவான்.

தானொரு காலம் தனிச்சுடராய் நிற்கும்
தானொரு கால்சண்ட மாருதமாய் நிற்கும்
தானொரு காலம் தண் மழையாய் நிற்கும்
தானொரு காலம் தண் மாயனும் ஆமே.

ஆக இவ்விதம் எல்லாமாக விளங்கும் ஒப்பு உயர்வு அற்ற உயர்கடவுளாய் சிவபெருமான் இல்லாத இடமே இல்லை. அனைத்திலுமே இருந்து இந்த அகில உலகத்தையும் ஆட்டிப்படைத்து நிற்பதோடு அருளையும் பொழிந்து கொண்டிருக்கிறான். சிவனை வழிபடுவோர் நல்ல வாழ்வைப் பெறுவார்கள். சிவனைப் போற்றிப் புகழ்வோர் இப்புவியில் பிறர் போற்றத்தக்க முறையில் செல்வவளம் பெற்றுச் சீரும்சிறப்புமாக வாழ்வர்.

## தலையில் குளிர்ச்சி

தலை எப்போதும் குளிர்ச்சியாக இருக்கவேண்டும். அதனால்தான் சிவபெருமான் தலையில் கங்கையை வைத்துள்ளார். சிரசு குளிர்ச்சியாய் இருப்பதற்குத்தான் குழந்தையின் தலையில் விளக்கெண்ணையைத் தடவுகிறோம்.

உ

(தொடர்ச்சி....

# அருணகிரி சுவாமிகள் அருளிய கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்.

### முருகன் திருவடிக்கு அணிகலமாவன

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை அகிலமுண்ட
மாலுக் கணிகலம் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

ஆலகால விடத்தை உண்டு ஆவன் என்ற பெயரைக் கொண்ட சிவபெருமானுக்கு ஆபரணமாயிருப்பது வெண்மையான தலையோட்டு மாலையாகும். உலகங்களை விழுங்கியவனான திருமாலுக்கு ஆபரணமாவது குளிர்ந்த அழகிய துளசி மாலையாகும், மயிலேறும் முருகனுக்குத் திருப்பாத அணிகலனாக விளங்குவது தேவர்களது சிரசுகளும், கடப்பமலர் மாலையுமாகும், முருகனின் கரத்தில் இருக்கும் வேலாயுதத்திற்கு அணிகலமாவது கடலும், சூரனும், மேருகிரி போலுயர்ந்த கிரௌஞ்ச மலையுமாகும்.

### குருநாதனைத் தொழும் அன்பு பொய்யாகாது

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிப்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே.

தமது திருமேனியின் பாதிப்பகுதி பச்சை நிறமுடைய சிவபெருமானுக்கு தனது ஞானக்கருத்தினை உபதேசித்த குருநாதனை, போர் செய்வதற்குரியதான வேற்படையை உடைய முருகனை, அவன் சந்நிதியிற் போய்த் துதித்து உய்திபெற சோதனை செய்த உண்மையான அன்பு பொய்யாகுமோ? அழுது வணங்கி, மனங்கரைந்து சாதித்த அறிவு அடியேனுக்கு எந்த இடத்தில் இவ்விதம் நேர்ந்தது. ஆச்சரியம் என்பதாம். முருகனிடம் எவ்விதம் நான் அன்பு பூண்டேன்.

## சத்திவாள் கையிருக்க எமன் என் செய்வான்

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மான்திரு முன்பு நின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

திருட்டுத்தனமுடைய எருமைக் கடாவின்மீது வருகின்ற இயமனே! உன்னை உலகத்தாய் அறியும்படி வெட்டி எனக்குப் புறங்கொடுத்து ஓடுமாறு செய்வதல்லாமல் விடமாட்டேன். கொடிய சூரனை மோதிப்போர் செய்து வென்ற சிவந்த வேலாயுதத்தையுடைய முருகனது அழகிய சந்நிதியில் நின்றேன். நீ உன்னுடைய கௌரவம் அனைத்தையும் மூட்டைகட்டிக்கொண்டு புறப்படடா, சத்தியாகிய வாளாயுதம் என் கையில் உளது ஜாக்கிரதை.

(பட்டி - வஞ்சனை)

## கால பாசத்தினின்றும் விடுதலை செய்

வெட்டுங் கடாமிசைத் தோன்றிடுவங் கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும் கராசலங்கள்
எட்டுங் குலகிரி எட்டும்விட் டோடவெட் டாதவெளி
பட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே.

துதிக்கைகள் பொருந்திய மலைபோன்ற திக்கு யானைகள் எட்டும், குலமலைகள் எட்டும், தத்தம் நிலைகளினின்றும் விட்டு அப்பால் ஓடிப்போகும்படிக்கு கண்ணுக்கு எட்டாத ஆகாயம்வரை மறையும்படி விரிக்கும் தோகையையுடைய மயில்வாகனனே! கொம்புகளால் எதிர்ப்பட்டன வற்றை முட்டி வெட்டும் எருமைக்கடாமீது வருகின்ற கொடிய இயமன் வீசுகின்ற பாசக்கயிற்றினால் என்னைக் கட்டும் சமயத்து, தேவரீர் தோன்றி அக்கட்டினின்றும் விடுவித்துக் காப்பாற்றி அருள வேண்டும்.

(அட்டயானைகள்- ஐராவதம், புண்டரீகம், மைனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சர்வபௌமம், சும்தீபம்- குலமலை எட்டு:- கைலை, கிடதம், இமயம், ஏமகூடம், மந்தரம், நீலகிரி, விந்தம், கந்தமாதனம்.)

---

### புகழை மறைத்துக்கொள்

தன் புகழ் வெளியே தெரியாமல் மறைத்தால் அவன் புகழை கடவுள் மூன்று உலகங்களிலும் வால்போஸ்டர் போட்டு ஒட்டுவார்.

உ

# திருநாவுக்கரசரும் பண்ணினேர் மொழியும்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள்.

திருநாவுக்கரசர் திருமறைக் காட்டில் வேதங்களால் அடைக்கப் பெற்ற கதவைத் தேவாரம் பாடித் திறக்கச் செய்தவர். இவ்வாறு அவர் செய்ததற்குக் காரணம் அவருடன் கூடத்திருமறைக்காட்டில் சுவாமி தரிசனம் செய்யச் சென்ற திருஞான சம்பந்தரேயாவர். ஏனென்றால் இருவரும் திருமறைக்காட்டு ஆலயத்துக்குச் சென்ற பொழுது பிரதான வாயில் அடைக்கப் பட்டிருக்கப் பக்கத்தே ஒரு சிறு வழி செய்து அதனூடாகவே எல்லோரும் சுவாமி தரிசனம் செய்யும் வழக்கம் இருந்தது. காரணத்தை வினவிய போது அங்கிருந்த அடியார்கள் வேதங்கள் காப்பிட்ட கதவைத் திறக்கும் ஆற்றல் இல்லாமையால் இப்படிச் செய்கின்றோம் என்றனர். அதுகேட்ட திருஞானசம்பந்தர் அப்பரை நோக்கி நாம் பிரதான வாயில் வழி சென்று தரிசனம் செய்ய வேண்டும். இக் கதவம் திறக்க நீரே தேவாரம் பாடும் என்று கூறினார். உடனே திருநாவுக்கரசரும் 'பண்ணினேர் மொழி' எனத் தொடங்கினார். பத்துப் பாடல் பாடியும் கதவு திறக்கவில்லை. உடனே அப்பர் "இரக்கமொன்றிலீர்" எனத் தொடங்கும் பதினோராம் பாடலில் வருந்தி வற்புறுத்திப் பாடச் சிவன் அருளால் கதவு திறந்தது.

இருவரும் பிரதான வாயில் வழிச்சென்று சுவாமிதரிசனம் செய்து மகிழ்ந்து திரும்பி அந்த வாயிலருகே வந்ததும் திருநாவுக்கரசர் திருஞான சம்பந்தரை நோக்கி இக்கதவு சிவனருளால் அடைக்கும்படி நீங்கள் பாடவேண்டும் என்று சொல்ல அவரும் பாடினார். முதலாவது பாடல் பாடி முடியுமுன்பே கதவடைத்தது. ஆலயத் திலிருந்து ஒரு மடத்துக்கு இருவரும் சென்று தங்கினர். அங்கு இரவு படுத்திருக்கும் போது "சிவன் திருவுள்ளத்தை அறியாமல் நான் திறக்கப் பாடினேன். அது தவறு போலும் திருஞானசம்பந்தரே திறக்கவும் பாடியிருக்க வேண்டும். நான் சிவபெருமான் திருவுள்ளத்தை தெரியாமல் தவறு செய்துவிட்டேன் போலும் என்று எண்ணியவாறு நித்திரை செய்யாது கவலையுடன் படுத்திருந்தார். அவர் அயர்ந்து உறங்கியதும் சிவபெருமான் கனாக்காட்சி மூலம் திருவாமூருக்கு வருக என்று அருள உடனே எழுந்து சென்றார். அப்பர் செல்வதை அறிந்து சம்பந்தரும் தொடர்ந்து சென்றார்.

இருவரும் சென்ற பின்னரும் சிவபெருமான் அப்பருக்கு காட்சி கொடுக்காது திருஞானசம்பந்தருக்கே முதலிற் காட்சி கொடுத்தார். திருஞானசம்பந்தர் தாம் சிவதரிசனம் செய்து கொண்டு அப்பருக்குக் காண்பிக்க அப்பரும் கண்டு வணங்கினார். இந்த நிகழ்ச்சியை அப்பர் சுவாமிகளே தேவாரத்திற் குறிப்பிடும் போது திருவீழிமிழலையில் சிவபெருமான் அப்பருக்கு நல்ல பொற்காசும் சம்பந்தருக்கு வாசியுள்ள பழைய காசும் கொடுத்தார். ஆனால் திருவாமூரிலோ சம்பந்தருக்குத் தாம் பழைய காசு கொடுத்த கவலையைப் போக்குவார் போல் முதலே காட்சி கொடுத்தார் என்று குறிப்பிடுகின்றார்.

திருமறைக்காட்டில் அப்பர் முதலாவது பாடியவுடனே சிவனருளால் கதவு திறக்காதிருந்த மைக்கு அப்பர் தேவாரத்தை இரசிக்க விரும்பியமையே காரணம் என்பார் சேக்கிழார். ஆனால் சிலர் நீண்டகாலம் பூட்டியிருந்த கதவைத் திறப்பதால் கதவுள்ளிருந்து கொடிய காற்று வெளிப்பட்டு எல்லோருக்கும் துன்பம் செய்யும் என்றே மெது மெதுவாகத் தாமதித்துத் திறந்தார் என்று சமாதானம் கூறமுற்படுகின்றனர். கதவு நீண்ட காலம் பூட்டியிருந்தாலும் பக்கத்தில் வேறுவழி செய்து எல்லோரும் ஆலயத்துள் சென்று வழிபட்டமையால் அப்படிக் கொடிய காற்று உரு வாகவோ வெளிப்படவோ வாய்ப் பில்லை என்க.

திருவீழிமிழலையில் திருநாவுக்கரசருக்கு நல்ல பொற்காசு கொடுத்தும் சம்பந்தருக்கு வாசியுள்ள பொற்காசு கொடுத்தும் அருள் விளையாடல் புரிந்த சிவன் திருமறைக்காட்டில் திருஞானசம்பந்தர் பாட்டுக்கு விரைவாகவும் திருநாவுக்கரசர் பாடலுக்குத் தாமதித்தும் அருள் புரிந்தார் எனக் கொள்ள வேண்டும்.

திருமறைக்காட்டிலும் திருவாமூரிலும் திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் சிறப்பாக, விரைவாக அருள் செய்ததைக் கண்டிருந்தும் திருஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்பட்ட போது சமணர் கொடுமைகளை நினைந்து அஞ்சி அன்புடன் திருநாவுக்கரசர் தடுத்தமை பொருந்தாத செயல் போலுள்ளது. ஆனால் அப்படித் திருநாவுக்கரசர் தடுத்திராவிட்டால் திருஞானசம்பந்தர் கோளறு பதிகம் பாட வாய்ப்பு உண்டாகியிராது. இந்த அடிப்படையில் நோக்கினால் திருஞானசம்பந்தர் வேயுறு தோளிபங்கன் எனும் பதிகம் பாட வேண்டும் என்பதற்காகச் சிவபெருமானே அப்பரைத் தடுக்கும் படி தூண்டியுள்ளார் எனக் கொள்ள வேண்டியுள்ளது. இப்படிச் சிந்திக்கும் போது இன்னொரு உண்மை கிடைக்கிறது. சிவபெருமான் கோளறு பதிகம் கிடைப்பதற்காகத் திருநாவுக்கரசரைத் தடுக்கும் படி தூண்டியமை போல நமக்கெல்லாம் பண்ணினேர் மொழிப் பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் கதவு திறக்கும்

வேண்டுதல் அமைந்து கிடைப்பதற் காகத் தாமே கதவுதிறப்பதைத் தாமதித்தார் என்று கருத வாய்ப்பு ஏற்படுகின்றது.

கும்பாபிஷேக சந்தர்ப்பங் களில் கதவு திறக்கப்படுதற்கும் ஒவ்வொருவரும் தம் அகக் கோவிலில் சிவனிருப்பதைத் தரிசிக்கும் பொருட்டு மனக்கதவு திறக்கப் பாடுதற்கும் பண்ணினோர் மொழிப்பதிகம் உதவும் சிறப்பினை ஆராய்ந்தால் இப்பதிகம் இப்படி நமக்குக் கிடைப்பதற்காகச் சிவபெருமான் செய்த அருளிப்பாடே கதவம் திறக்கத் தாழ்ந்தமை என்று தெளிய முடிகின்றது.

## ஆலயப் பிரசாதத்தின் மகிமை

கடவுளுக்குப் படைக்க, எல்லா உயிர்களுமே தம்மால் இயன்றதை அளிக்கின்றன. தாவரங்கள் மலர், பழம் ஆகியவற்றைக் கொடுக்கின்றன. பால், தயிர், நெய் போன்றவற்றை விலங்கினங்கள் கொடுக்கின்றன. சமைத்த உணவையும், பலகாரங்களையும் மனிதன் தயாரித்து அளிக்கின்றான். கடவுளின் பெயரால் ஆலயத்துக்கு வந்து சேரும் இந்தப் பொருட்கள், பிரசாதமாக எல்லோருக்கும் பகுத்துக் கொடுக்கப்படுகிறது. எதைக் கொடுத்தாலும் நாம் கொடுத்தமைக்காகப் பெருமைப்படுகிறோம். ஆனால் இறைவனுக்குப் படைத்து, அதையே பிரசாதமாகப் பெற்று எல்லோருக்கும் அளிக்கும்போது, அத்தகைய தற்பெருமை ஏற்படுவதில்லை. பிறரிடம் ஏற்பதும், பெறுவதும், ஒருவருக்கு குறிப்பாக மேல்நிலையில் உள்ளவர்கள் இகழ்ச்சி எனக் கருதப்படுகிறது. ஆனால், பிரசாதமாகப் பெறுவதில் இத்தகைய இகழ்ச்சி என்ற மனப்பான்மை ஏற்படுவதில்லை. காரணம் அது கடவுளின் பிரசாதம் என்றாகிறது. அடக்கம், பணிவு, சமத்துவம் ஆகிய நல்லுணர்வுகள் உண்டாக்க கோவில் பிரசாதம் முக்கியத்துவம் பெறுகிறது என்றால் அதன் மகத்துவத்தை கூற வார்த்தைகள் இல்லை எனக் கூறலாம்.

- இந்து தர்ம சாஸ்திரம் -

ஆசையுடையவன் அரக்கன், பற்றுடையவன் விலங்கு,
அன்புடையவன் மனிதன், அருள்
உடையவன் தெய்வம்.

உ

# கணம்புல்ல நாயனார்

**திரு க. சிவசங்கரநாதன் J.P. அவர்கள்.**

முற்காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள் தமது வருங்காலச் சந்ததியினர் தம்மைப்போல் இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு வசதியாகத் திருக்கோயில்களை அமைத்தனர். இறைவனுடைய திருக் கோயிலில் அவரவர் வசதிக்கேற்பச் செய்வதற்குரிய திருப்பணிகள் உண்டு. பொருளுடையார் அப்பொருள் கொண்டு பலவற்றைச் செய்யலாம். புதிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை வழிபாடு நடக்கச் செய்யலாம். கோயிலில் புதிய மண்டபங்களை அமைக்கலாம். நந்தவனம் அமைக்கலாம். மிகுதியான பொருள் உதவ வசதி இல்லாதவர்கள் பூசைக்குரிய பண்டங்களை அளிக்கலாம். திருவாபரணம், பரிவட்டம், பாத்திரம் ஆகியன கொடுக்கலாம். திருவிளக்கு ஏற்றலாம். பொருளே இல்லாதவர்கள் கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்யலாம் கழுவலாம். இப்படி உள்ள பலவகைத் திருத்தொண்டுகளில் திருவிளக்கேற்றுதல் ஒன்று அது இறைவன் திருவுருவைப் பலரும் தரிசிக்கச் செய்யும் தொண்டு.

''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்''

என்று அப்பர் சுவாமிகள் அந்தத் தொண்டைச் சிறப்பாகப் பாடியிருக்கிறார். அத்தகைய சிறந்த தொண்டைச் செய்தவர் கணம்புல்ல நாயனார்.

வெள்ளாற்றின் தென்கரையில் உள்ள **இருக்கு வேளூர்** என்னும் தலத்தில் தோன்றியவர் இவர். அந்த ஊரில் ஊருக்கெல்லாம் பெரிய நாட்டாண்மைக்காரராய் வாழ்ந்து வந்தார். மிக்க செல்வமும் சிறந்த குணமும் நிரம்பியவர். இறைவனுடைய திருவடியே இணையற்ற மெய்யான பொருள் என்ற கருத்தை உடையவர் நாள் தோறும் திருக்கோயிலில் திருவிளக்குகளை ஏற்றிப் பணிசெய்து வந்தார். வறுமை நிலை உண்டானது நன்றாக வாழ்ந்த ஊரில் வறியவராக வாழ மனம் இல்லாத நாயனார் தில்லைமாநகர் வந்து சேர்ந்தார். அங்கே திருக்கோயிலில் திருவிளக்கு ஏற்றும் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். அதன்பொருட்டு வீட்டில் உள்ள பண்டங்களை ஒவ்வொன்றாக விற்றார். அவ்வாறு செய்யச்செய்ய பண்டங்கள் குறைந்து வந்தன கடைசியில் விற்பதற்கு ஒன்றும் இல்லாமற் போகவே வேறு என்ன செய்வது என யோசித்தார். பிறரிடம் சென்று இரந்து பொருள் பெற்று அதைக் கொண்டு திருவிளக்குத் தொண்டு செய்ய இவருக்கு விருப்பம் இல்லை. ஆதலால் மெய்வருந்தி ஏதேனும் தொழில் செய்து தம்

பணியை நடாத்த நினைத்தார். ஒருவரை அணுகி அவருக்கு ஏவல் புரிவதற்கும் மனம் துணியவில்லை. இறுதியாக ஊருக்குப் புறம்பே உள்ள காட்டுப் பகுதிகளில் உள்ள கணம்புல் என்ற ஒருவகைப் புல்லை அரிந்து கொண்டு வந்து அதை விற்றுப் பெற்ற பொருளைக் கொண்டு நெய்வாங்கித் திருவிளக்கேற்றினார்.

இவ்வாறு செய்யும்போது ஒரு நாள் இவர் அறுத்துக்கொண்டு வந்த புல் விலைப்படவில்லை. ஆகவே நெய் வாங்கப் பொருள் கிடைக்க வில்லை. அவருக்கு ஒன்றும் தோன்றாமல் வருந்தி அந்தப் புல்லையே விளக்கைப் போல வைத்து எரித்தார். இப்படியே சில நாட்கள் செய்து வந்தார். யாமந்தோறும் விளக்கு எரிப்பது வழக்கம். நெய்விளக்காக இருந்தால் நின்று எரியும். புல் திகுதிகு என்று உடனுக்குடன் எரிந்துவிடும். அதனால் யாமந்தோறும் எரிப்பதற்கு புல் போத வில்லை. நான்காவது யாமத்தில் வைத்திருந்த புல்லெல்லாம் எரிபடவே மேலே எரிக்க ஒன்றும் இல்லை. அந்தச் சமயத்தில் எங்கே போய் எதைக் கொணர்வது? ஒரு கணம் அவர் கலங்கினார். உடனே தெளிவு பெற்று தம்முடைய திருமுடியையே விளக்கிலிட்டு எரிக்கலானார்.

இறைவன் அவருடைய பேரன்பைக் கண்டு திருவருள் பாலித்தார். தம் உடம்புக்கு வரும் துன்பத்தை எண்ணாமல் தாம் மேற் கொண்ட தொண்டை முட்டின்றி முடிக்கும் நெஞ்சத்திண்மை கணம் புல்ல நாயனாரிடம் இருந்தது. அவரை அப்பர் சுவாமிகள் இரண்டிடங்களில் பாராட்டியிருக்கிறார்.

வணங்குவார் இடர்கள் தீர்க்கும்
"மருந்து நல் லருந்த வந்த
கணம்புல்லர்க் கருள்கள் செய்து
காதலாம் அடியார்க் கென்றும்
குணங்களைக் கொடுப்பர் போலும்
குறுக்கை வீரட்டனாரே"

என்பதில் அருந்தவத்த கணம் புல்லர் என்று சிறப்பித்தார். தம் திருமுடியையே விளக்காக எரிக்கச் சரீராபிமானம் போனால்தான் இயலும். அதைக் காட்டிலும் சிறந்த தவம் ஏது?

நிணம் புல்கு சூலத்தார், நீலகண்டர்,
"எண்டோணர், எண்ணிறந்த குணத்தினாலே
கணம்புல்லன் கருத்து உகந்தார்"

என்று பாடினார். கணம்புல்ல நாயனார் வரலாற்றின் மூலம் திருவிளக்கு ஏற்றுதலின் சிறப்பையும் மகிமையையும் சிந்தித்துச், சைவத் தமிழ் மக்களாகிய யாமும் இறைவனுக்குப் பணிகள் செய்வோமாக.

(தொடர்ச்சி..

உ

# திருக்குறள் – திருவாசகம்: ஒரு பார்வை

டாக்டர் கஸ்தூரிராஜா அவர்கள்.
(தமிழ்நாடு)

ஐம்புலன்களை அடக்கியவர்கள் ஒழுக்க நெறியில் வாழ்வதால், நெடுங்காலம் வாழ்வர், இதனை,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்" (6)

என்ற குறட்பா உணர்த்துகிறது. இதன் காரணம் இவ்வுலகுக்கு மீண்டும் வராத நிலையை நமக்கு குறிப்பாக 356, 358- குறட்பாக்கள் உணர்த்துவதை அறியலாம். இறைவனின் தாளை வணங்க இடும்பை நீங்கும் என்பதனை 4, 7, 8- குறட்பாக்கள் உணர்த்தியிதை மேலே கண்டோம். நம் உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் இறைவனை வணங்கவே உள்ளது. இதனைக்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (9)

என்ற குறட்பா நமக்கு இறைவன் தாளை வணங்குவதே வேலை என்கிறது. ஐம்புலன்களும் வஞ்சனை செய்து கடவுளை மறக்குமாறு செய்யும் என்பதனை,

"பொய்ப்பால் நரம்பு கயிராக மூளை என்பு
தோல் போர்த்துக் குப்பாயம்" (ஆசைப்பத்து 2)

என்ற அடிகள் மூலம், உணரலாம். மேலும்

"விலங்கு மனத்தால் விமலா உனக்கு" (சிவபுராணம் 56)

என்கிறது. இதற்கு டாக்டர் அ. அறிவொளி அவர்கள் சிவபுராணம் பக் 285-286 இல் கீழ்வருமாறு விளக்கம் தருகிறார்.

"பொறி என்பது வெறும் கருவி. அது படம் பிடிக்கும் கமராவைப் போன்றது. புலன் என்பது உள்ளே படம்பதிவாகும் சுருள் போன்றது. (ஃபிலிம்) (படச்சுருள் உதவியும் புகைப்படக் கருவிக்குத் தேவை) அதுபோலப் புலன் என்பது ஞானமயமாக இருக்கும் ஒன்று ஆன்மாவினால் உண்டாகும் உயிராகிய அசைவு இருக்கும் வரை புலன் (அறிவு) பணிபுரியும். உயிர் போனதுமே பணியை நிறுத்திவிடும்"....... பிரணவப் பொருளாகிய குடிலை ஓய்ந்துவிட்டாற் புலன்களில் ஞானமும் பாதிக்கப்படும். அதனால் மனிதனுக்கு அறிவிக்க வேண்டுவதைச் சரியாகக் காட்டவில்லை என்று கூறினார்.

எதையும் தேடாமல் கண்டுபிடிக்க முடியாது

ஐம்புலன்களையும் அடக்கி, இறைவனடி சேர்ந்தாற் பிறவிப் பெருங்கடலை நீந்த இயலும். (குறள் 10) திருவாசகம் (சிவபுராணம்)

"அல்லற் பிறவி அறுப்பானே 'ஓ' என்று (91) இப்பிறவி மட்டுமல்லாது எல்லாப் பிறவியும் அறுப்பான். ஆகையால் அல்லலைத் தரும் பிறவி என்று கூறுகிறது.

சைவர்கள் முழுமுதற் கடவுளாகச் சிவனைக் குறிப்பது போல, உலகம் ஒரு முதல்வனை உடையது என்று கூறுகிறது. முதற் குறட்பா இயற்கை உணர்வுடையவன், அடியவர்களின் உள்ளக் கமலத்தில் இருப்பவன், வரம்பில் இன்பம் உடையவன் (வேண்டுதல் வேண்டாமை இலான்) முற்றுணர்வுடையவன், பாசங்களின் நீங்கினவன், தனக்குவமை இல்லாதவன் (முடிவிலா ஆற்றல் உடையவன்) பேரருள் உடையவன் (அறஆழி அந்தணன்).

"சைவ சித்தாந்தக் கருத்துக்களையே, சமயக் கொள்கையாகக் கொண்டுள்ள திருக்குறளே சைவர்களின் வேதம்" என்ற கருத்தினைத் திருக்குறளில் - சைவசித்தாந்தம் (ப.126) என்ற நூலில் திரு கு. வைத்தியநாதன் அவர்களின் கருத்துக்களை இங்கு நினைவு கூர்வோம்.

இறைவனே முதல்வன் (1) அவனுடைய பண்புகள் இவையிவை (2-9) அப்படிப்பட்ட இறைவனின் தாளினைப் பணிந்து பிறவிப் பெருங்கடல் நீந்துக (10) என்று கூறிய திருவள்ளுவரின் வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடிக்க இறையருளால் இறையுண்மையை உணர இவ்வுலகிலேயே அழியாப் பேரின்ப வீட்டைப் பெற இயலும் என்பது மறுக்க இயலா உண்மையாகும். இதனையே திருவாசகமும் வலியுறுத்துகிறது.

**முடிவுரை:-**

1) இருவேறு காலகட்டத்தில் தோன்றிய இரு நூல்களும் இறை உண்மையைச் செப்புவதில் ஒன்றுபடுகின்றன.
2) 'சிற்றின்பம் வழிப் பேரின்பம்' என்பதனைத் திருக்குறள் மொழிய, திருவாசகம் இறையின்பமே சிறந்தது என வலியுறுத்துகிறது.
3) போலித்துறவு மறுக்கப்படுகிறது.
4) இறைவனைக் குறிக்காத உலகநெறியாகப் பொதுமறை அமையச் சிவனைக் குறித்த சைவ நெறியாகத் திருவாசகம் அமைந்துள்ளது.
5) அன்பே கடவுள் - இரு நூல்களும் ஒப்புக் கொண்ட உண்மையாகும்.

(முற்றும்)

**நன்மையும் தீமையும்**

போகப்போக விரிவது நன்மைக்குச் செல்லும் பாதை. போகப்போகச் சுருங்குவது தீமைக்குப் போகும் பாதை. நம் பாதை எது?.

துக்கத்தை மறக்கச் செயலில் ஈடுபடவேண்டும்

உ

# அண்டினோர்க்கு அனைத்தையும் தந்திடும் அற்புதக் கோலனே கந்தன்

திரு நீர்வை மணி அவர்கள்.

முருகப் பெருமான் ஆண்டியாயிருக்கும் அற்புதக் கோலத்தை வழிபட்ட அடியார் ஒருவர் சுவாரஸ்யமாக முருகப்பெருமானின் தாயாராகிய பார்வதி தேவியோ பல பொக்கிஷங்களைத் தன்னகத்தே வைத்திருக்கும் இமயபர்வத இராஜாவாகிய இமவானின் புதல்வி. தந்தையோ நிதிகளுக்கெல்லாம் அதிபதியான குபேரனை தோழனாகக் கொண்டவர்.

தாய் மாமனானவரோ கல்மலையான கோவர்த்தனகிரியை குடையாகப் பிடித்துப் பசுக்களையெல்லாம் காப்பாற்றுவதற்காகப் பெருமழையைத் தடுத்த பராக்கிரமசாலியான மகாவிஷ்ணு. மாமியாரோ செல்வங்களின் அதிதேவதையான மகாலட்சுமி.

இவ்விதமாகப் பெற்றோர்களின் வழிதான் செல்வம் மிகுந்ததென்றால் முருகப்பெருமானுக்குப் பெண் கொடுத்த மாமனாரோ மூவுலகங்கட்கும் அதிபதியான இந்திரன். இப்படியிருக்க எம்பெருமான் ஆண்டியாக இருப்பது ஏன்? என்பதைச் சிந்திப்போமானால் தன்னை நாடி வருபவர்க்குத் தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாது பக்தர்களுக்கே யாவற்றையும் கொடுத்து அதனாற் பூரிப்படைபவர்தான் கலியுகவரதனாகிய கந்தன் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

பொன்மயக் கிரிபெற்ற புதல்வியோ அன்னையாம்
பொருளுக்கோ! அதிபதி எனும்
புட்பக விமானத் தனைத் தோழனாகக் கொண்ட
புங்கவனும் உன் தந்தையாம்
கன்மலைக் குடைகொண்டு மழைதடுத் தன்றுநிரை
காத்தஒரு கடல் வண்ணனோ
கருதுதாய் மாமனாம் பெரியதன மேந்திடும்
கமல மாதுன் மாமியாம்
பன்மலர்த் தொடைசூடி மூவுலகுமாள்பவன்
பார்க்கில் ஒருபெண் தந்தவன்
பாரிற் பெருஞ் செல்வம் உற்றும் நீகோவணப்
பண்டாரமாய் வருவதேன்
சன்ம வெப்புப் பிணியகற்றவரு சஞ்சீவி

தழையவரு பழனி மலையில்
சகலவுல கினருமடி பரவவொரு பொருளுதவு
தண்டபாணித்தெய்வமே.

அடியார்க்கு அருளும் அன்பனாகிய முருகப்பெருமான் தன்னை நம்பினோர்க்கு என்றும் துணைநிற்பவன் என்பது முருகபக்தர்கள், அடியார்கள் பலரதும் வரலாறுகள் மூலம் நாம் நன்கு அறியக் கூடியதாயுள்ளதன்றோ?

மேலேயுள்ள பாடல் இதனை அழகாக எடுத்து விளங்க வைக்கின்றது.

## வாசகர் உள்ளத்திலிருந்து

2005ம் ஆண்டு மாசிமாத "ஞானச்சுடரில்" சந்நிதியானின் அற்புதத்தை உள்ளதை உள்ளபடியே நடந்தவற்றை அப்படியே மிகத் தெளிவாக பக்திச் சொல் நயத்தோடு எழுதியிருந்தீர்கள். எனது கைக்கு "ஞானச்சுடர்" கிடைத்ததும் நான் முதலில் வாசிப்பது "சந்நிதியானின் அற்புதமே" அதன் பிறகே மற்றவை. சந்நிதியானின் அற்புதத்தை சொல்லி, எழுதினாலும் விளங்காது. இதன் உண்மைத் தன்மையை அவரவர் அதை அனுபவரீதியாக அனுபவித்தால்தான் உணர்ந்து தெரிந்து கொள்ள முடியும். எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நான் நன்றாக உணர்ந்து தெரிந்து கொண்டேன். அவனுடைய அற்புதத்தை உணர்வுபூர்வமாகவே நான் அனுபவித்தவன், சந்நிதிமுருகன் எல்லாவற்றிலும் தனித்தன்மை வாய்ந்தவன், அன்று எனக்கு ஏற்பட்ட பெருந்துன்பம் பனிபோல் 1மணித்தியாலத்தில் இறையருளால் நிறைவு பெற்றாலும், இடையில் இதனால் ஏற்படப்போகும் பெரும் ஆபத்தை எப்படி இறைவன் சந்நிதி முருகன் என் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றி விட்டான் என்று எண்ணும் போது என் உடம்பெல்லாம் புல்லரிக்கின்றது. அவன் திருவருளே திருவருள் தான் நேரடியாக வந்து அருள்பாலிப்பது போன்று சுவாமிகட்கு அவன் ஆத்மீக உள்ளுணர்வை வழங்கி அவர்மூலம் என் பெருந்துன்பத்தை நீக்கியதை எப்படி எடுத்துரைப்பேன். அன்று அந்த வாயிலில் 1மணித்தியாலத்தில் முடிந்த பெருங்காரியம் அப்படி முடியாவிட்டால், அதை நிறைவு செய்ய குறைந்தது 1கிழமையாவது செல்லும் அத்துடன் பணச் செலவு, பணச்செலவு போனாலும் பரவாயில்லை, அதற்குரிய அந்தப் பொருளை பொருத்தமாக எடுப்பதென்பது மிகவும் கஸ்டம், இத்தனையும் தாண்டி இறைவன் செய்த திருவருள் திருவருளே.

சிவ ஆறுமுகசுவாமி J.P.

உ

# வந்திப்பார் மதுரக்கனி

திரு முருகவேபரமநாதன் அவர்கள்.

இத்திருவாக்கு திருவாதவூரர் திருவாக்கினின்றும் மலர்ந்தது. கனி என்றாற் பழம் என்று பொருள். முறையாக முற்றி விளைந்து கனிய வேண்டும். எனவே கனிந்தது பழம். சுட்டபழம் கேட்டு ஏமாந்த ஔவை காய் முற்றின் தின் தீங்கனியாம் என்றார். மரங்கள் தரும் பழங்கள் நாட்டுக்கு நாடு வெவ்வேறானவை. நாம் போற்றுவன முப்பழங்கள். அவையே முக்கனியெனப்படும் வாழை, மா, பலாக்கனிகள். கனிகள் பல சேரின் அது கனிக்கலம்பகம். அன்புக்கனி, இதயக்கனி, தமிழ்க்கனி பண்பால் அமைந்த பிரயோகங்கள். கனியென்ற வாதவூரர் மதுரக்கனி யென்கிறார். மதுரம் தித்திப்பை, இனிப்பை அதிரசமான சுவையைக் குறிக்கும். கனிமதுரத்தோடு சேர்ந்து அதன் மாண்பை நீர்மையை மேம்படையச் செய்தது. அதுதான் மதுரிப்பு. கனிமதுரத்தோடு இணைந்து ஒருபடி மேலே வந்திப்பார் உடன் சேர்ந்து இன்னும் பெருமை சேர்க்கிறது. கனிக்கு வந்தித்தல்- வணங்குதல், போற்றுதல், வழிபடுதல், தோத்திரம் செய்தல், பணிந்து தொழுதல், சங்கீர்த்தனம் செய்தல் என்று பொருள் படலாம். எனவே இறைவனை நினைந்து பணிந்து கும்பிடல் இறை வணக்கத்தில் ஒரு சிறப்பான அம்சம். அப்படி அன்போடு குழைந்து தொழும் பக்தன், சுவைக்கும் கனியாகவே இறைவன் திகழ்கிறான்; பயன் தருகிறான். இனி இத்தொடர் அமைந்த திருவாசகத்தைப் பார்ப்போம்.

மானோர் பங்கா வந்திப்பார் மதுரக்
கனியே மனம் நெகா
நானோர் தோளாச் சுரை யெத்தால் நம்பி
இத்தால் வாழ்ந்தாயோ
ஊனே புகுந்த உனையுணர்ந்தே யுருகிப்
பெருகும் உள்ளத்தை
கோனே அருளுங் காலந்தான் கொடியேற்
கென்றோ கூடுவதே

திருவாசகம். பிரார்த்தனைப்பத்து 10

மானோர் பங்கா- பார்வதியை பக்கத்தில் உடையசிவனே! மனம் நெகா- மனம் இளகாத. தோளாச்சுரை- தொளைக்கப்படாத சுரக்காய்,ஒத்தால்- அதுபோன்று இருந்தால். சுரக்காயை தோண்டினால் அது பாத்திரமாகப்

பாவிக்கலாம். அதைச் சுரைக்குடுக்கை என்பர். தண்ணீர்ப் பாத்திரமாகப் பயன்படுத்தலாம். பதநீர்கள் இறக்கப் பயன்படுத்தலாம். எனவே நான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று நீ புறக்கணிப்பது நினது கருணைக்குப் பொருத்தமானதா. இத்தால் வாழ்ந்தாயோ. இத்தால் வாழ்ந்து விட்டாயோ?. வந்திப்பவர் பால் விரைவில் வரும் பெருந்துணையாய் இருப்பவனைக் கனியாகக் கண்டார். காட்டினார் மணி மொழியார். அவரே (தன்னை) வாழைப்பழத்தின் மனம் கனிவித்து அருள வேண்டும் எனப் பெருந்துறையானை வேண்டியும் இருக்கிறார். நொது நொதுப்பான வாழைக்கனி போல மனங்கனிந்தாற்றான் மதுரக் கனியைச் சுவைக்கலாம். நையாத மனத்தனையும் நைவிப்பானை எனத்திருவிசைப்பா ஆசிரியரும் குறிப்பிடுகிறார்.

தமிழென்றாலே இனிமையென்று பொருள் கொண்டாலும், பேச்சின் தன்மையால் அது கடினமாகப் பிறரைக் குத்தவும் செய்யும், மென்மதுரவாக்கால் மகிழும் சகம் கடின வன்மொழியால் என்றும் மகிழாதே என்பது அவ்வை வாக்கு. இதை மையமாகக் கொண்டு வள்ளுவர் இனிய சொற்கள் இருக்க, வன்மையான கடின சொற்களைப் பாவிப்பது ஒரு மரத்திலே பழுத்த பழங்கள் இருக்கத்தக்கதாக காயைப் பிடுங்குவது போன்ற செயலை ஒக்குமென எச்சரிக்கை செய்கிறார்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று"

திருக்குறள் 100

மதுரச்சுவை கனியோடும், பாவத்தோடும், பக்தியோடும், வாசகத்தோடும் தொடர்புடையது. கம்பநாடர் பழைய காப்பியநூல்கள் செவியால் அனுபவிக்கும் கனியெனப் பாடுகிறார்.

தோதைகள் சொரிவன குளிர் இள நறவம்;
பாதைகள் சொரிவன பருமணி கனகம்;
ஊதைகள் சொரிவன உயிர் உறும் அமுதம்;
காதைகள் சொரிவன செவி நுகர் கனிகள்.

இன நற வம் -புதுத்தேன் கம்பராமாயணம்

மாலைகள் தேனைச் சொரிகின்றன. பாதைகள் (வழிகள்) மாணிக்கமும் பொன்னும் சொரிகின்றன. பழம் பெரும் இலக்கியங்கள் செவியுணர்வுக்காம் கவிதைகளைச் சொரிகின்றன.

இறைவன்மேற் பாடும் பாமாலையை ஆழ்வார்கள் கீர்த்திக்கனி எனச் சொல்வர். காயிலே புளிப்பதென்ன கண்ணபெருமானே- நீ கனியிலே இனிப்பதென்ன கண்ணபெருமானே எனக் கண்ணனைக் கேட்கிறார் பாரதியார். அன்பும் பழமாகக் காட்சியளிக்கிறார் பழனியாண்டவர். இவ் வண்ணம் தம் இறை அனுபவங்களைக் கனியில் வைத்துப் பாடிய அருளாளர்களில் ஒருவர்

தாயுமான சுவாமிகள் இவர் பதினெட்டாம் நூற்றாண்டிலே திருச்சிராப் பள்ளியிலே வாழ்ந்த யோகசித்தர். இவரது மனோதர்மம் இனிவரும் பாடலில் வெளிப்படுகிறது.

ஒன்றும் அற நில் என்று உணர்த்தியரும் மோனகுரு
தன்துணைத்தாள் நீடுழி தாம் வாழ்க- என்று என்றே
திக்கு அனைத்தும் கைகுவிக்கும் சின்மயன் ஆம் தன்மையற்கே
கைக்குவரும் இன்பக்கனி

தாயுமானவர் பாடல்கள் உடல்பொய்யுறவு 19 ஒன்றும் அறநில்- மனத்தைக் காலியிடமாகச் செய். துணைத்தாள் இரண்டு திருவடிகள். தாயுமானாரின் குருவுக்கும் மௌன குரு என்றே பெயர். ஒரு தினம் மலைக்கோட்டையில் அமர்ந்து அருள் பாலிக்கும் தாயுமானாரை வழிபட்டுத் திரும்பும் போது வழியிலே மௌன குருவைக் கண்டு வணங்கி அவரிடம் உபதேசம் பெற்று அருட்கவியானார். குருநாதனையே மதித்து எங்குமே. அவரைத் தொழும் அடியவர்க்கு இறையனுபூதி கைமேற் கிடைக்கும் என்ற வண்மையை இப்பாடல் உணர்த்துகிறது. கனிபோன்ற மதுரச் சொல்லாலே தான் இறைவன் பெரும் புகழைப் பாடவேண்டும் என்பதையும் தாயுமானவர் உணர்த்துகின்றார்.

கல்லால் எறிந்தும், கை வில்லால்
அடித்தும் கனிமதுரச்
சொல்லால் துதித்தும், நல்பச்சிலை
தூவியும் தொண்டர் இனம்
எல்லாம் பிழைத்தனர், அன்பு அற்ற
நான் இனி ஏது செய்வேன்
கொல்லா விரதியர் நேர் நின்ற
முக்கட் குருமணியே

கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியே கருணைமாகடலே எனத் திருவிசைப்பா ஆசிரியரும் பாடுவதை நாம் கண்டு பாடி இன்புறுகிறோம். இப்படியான அனுபூதி நிலை எல்லோருக்கும் வாய்ப்பது அரிதினும் அரிது அன்றோ.

(தொடரும்...

**வெயிலுக்குகொதுங்க உதவாது**

நமக்கு மிகவும் உரியதென்று கருதப்படுகின்ற உடம்பின் நிழல் வெயிலுக்குக்கூட ஒதுங்க நமக்கு உதவாது. அதுபோல நாம் அரிதில் தேடிய கைப்பொருள் எதுவும் இறுதி நாளில் மரண யாத்திரை செல்லும்போது உடன் வராது.

# ஆன்மீக வளங்கள், விழுமியங்கள்

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்.

இப்பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களையும் நமது தமிழ் இலக்கணகாரர், இரண்டு திணைகளுக்குள் அடக்குகின்றனர். ஒன்று உயர்திணை, மற்றையது அஃறிணை.

"மக்கள், தேவர், நரகர் உயர் திணை. மற்று உயிர் உள்ளளவும் இல்லவும் அஃறிணை" என்பது நன்னூற் சூத்திரம்.

இதன்படி மக்கள், தேவர், நரகர் என்கின்ற முத்திறத்தாரும் உயர்வானவர்கள். எனவே அவர்கள் உயர்திணையில் வைக்கப்படுகிறார்கள். ஏனைய உயிர் உள்ள சீவராசிகளும், உயிர் அற்ற சடப் பொருள்களும் உயர்திணையில் வைத்துக் கொள்வதற்குரிய தகுதிப் பாடுகளைப் பெற்றுக் கொள்ளாத படியால், அவையாவும் அஃறிணையில் அடக்கப்பட்டுள்ளன. இது தமிழ் இலக்கணகாரர் செய்த பாகுபாடு.

மக்கள், தேவர், நரகர் என உயர்திணையில் வைத்துப் பேசப்படுகின்றவர்கள் அனைவரும் மனிதர்களே என்பதை ஏற்றுக்கொள்வோமேயானால், தேவர் என்போர் தெய்வ மனங்கொண்ட மனிதர்; மக்கள் என்போர் மனித மனங்கொண்ட மனிதர்; நரகர் என்போர் விலங்கு மனங்கொண்ட மனிதர் எனவும் நோக்கலாம்.

பிறப்பினால், அங்க அடையாளங்களால், தெய்வ மனத்தினர், மனித மனத்தினர், விலங்கு மனத்தினர் ஆகிய முத்திறத்தினரும் உயர் திணையினர் ஆவர். ஆயினும் அவர்களின் வேறுபட்ட குணங்கள், பண்புகள், தன்மைகள் காரணமாக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது வள்ளுவம். சகல மனிதர்களும் பிறப்பினாற் சமமானவர்களே என்னும் வள்ளுவர் நிலைப்பாடு குறிப்பிடத்தக்கது. பண்பினால், நல்ல குணத்தினால், நல்லொழுக்கத்தினால் ஏன் மனிதர்கள் மத்தியில் ஒருமைப்பாடு இருக்கக்கூடாது. இருக்கமுடியும்; இருக்கவும் வேண்டும். ஆனால், வேறுபாடுகள் தான் தொடர்ந்து காணப்படுகின்றன. மனம் தான் காரணம்.

மனமே, எண்ணங்களும் உணர்ச்சிகளும் தோன்றுமிடம். மனத்தின் தன்மையே அங்கு தோன்றும் எண்ணங்களினதும் உணர்ச்சிகளினதும் தன்மைகளைத் தீர்மானிக்கின்றன. மிண்டு மனத்தில் தோன்றும் எண்ணங்களும் உணர்ச்சிகளும் பேச்சுக்களிலும், செயற்பாடுகளிலும் வெளிப்படுத்தப்படும்போது, கடுமையாகவும் கொடுமையாகவும் வந்துவிடுகின்றன. தூயமனங்களிற்

சாத்வீக குணங்கள் தெய்வீகத் தன்மைகள் காணப்படுகின்றன. அங்கிருந்து புறப்படும் பேச்சுக்கள் அமைதி நிறைந்தனவாகவும், அத்தகைய சாத்வீக மனத்தினால் உந்தப்பட்டு ஆற்றப்படுகின்ற செயல்கள் யாவரையும் வாழ்விப்பனவாகவும் அமையும். மனிதரைத் தூயமனத்தினர், சித்தம் அழகியர், செம்மனச் செல்வர்கள் ஆக்கச் சமயம் உதவுகிறது.

"மிண்டு மனத்தவர் போமின் கண்; மெய்யடியார்கள் விரைந்து வம்மின்" என்கிறார் ஓர் அருளாளர். மிண்டு மனத்தவர், இராசத தாமத குணங்களைக் கொண்டவர்கள். இவர்கள் தமக்குமட்டும் பிறர்க்கும் உரியவர்கள். மனித, தெய்வ மனங் கொண்டவர்கள் தமக்கும் பிறர்க்கும் உரியவர்கள். அன்பும், கருணையும் நிறைந்தவர்கள். பிறருக்காக இரங்காமலும், பிறருக்கு உதவாமலும் இருக்கமாட்டாதவர்கள். இத்தகைய ஆத்மாக்களையும், மகாத்மாக் களையுமே இன்று உலகம் வேண்டி நிற்கிறது.

நரகர் தமக்குரியாளர்; மனிதர் தனக்கும் பிறர்க்குமுரியாளர்; தேவர் என்போர் நமது பூவுலகைப் பொறுத்த மட்டில் ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள், மகாத்மாக்கள், சீவன் முத்தர்கள் ஆகியோரைக் குறிக்கும்.

ஒரு தரத்திலேயே, மனிதப் பிறப்பு எடுத்தவர்கள் தொடர்ந்து அப்பிறவியில் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. இறைவழிபாடு, இறை அருள் என்பவற்றின் துணையுடன் கீழ்த்தரத்திலிருந்து, மேற்றரத்திற்கு வகுப்பேற்றம் பெறமுடியும். இதுவே சைவத்தின் சிறப்பும் பெருமையும் ஆகும். சைவம் இதற்கு வழிகாட்டுகிறது.

மனிதன் இயல்பாகவே ஆன்மீக வளங்கொண்டவன்; ஆன்மீகச் செல்வன். ஆன்மீகப் பண்புகளுடனும், சாத்வீகக் குணங் களுடனும் வாழத் தகுதியுடையவன்; உரித்துடையவன். ஆன்மீக வழியில், அன்பு நெறியில் வாழ்தல் மனிதனின் அடிப்படை உரிமையாகும். அதை மீறுதல், தனது உரிமையைத் தானே மீறுதல் ஆகும்.

ஆன்மீக வளங்கள்தான் விழுமியங்கள். அன்பு, அருள், அறிவு, உண்மை, நீதி, சாந்தி, அஹிம்சை, கருணை, கரிசனை முதலியவே ஆன்மீக விழுமியங்கள்; ஆன்மீகச் செல்வங்கள் விரயம் செய்யப்படலாகா. அவை நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். அவிசொரிந்து ஆயிரம் யாகங்கள் செய்வதிலும் அன்பும் அருளும் பிறர்மீது பொழிந்து, நீதியில் நின்று தியாகம் செய்தல் மேலானதாகும். அன்பே சிவம் என்பதை உணர்வோம். மேன்மக்களாக உயர்வோம்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்".

(தொடர்ச்சி..

உ

# யார் இந்த (ச்) செல்லம்மா?

## சச்சிதானந்தா ஆச்சிரமம்

## ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்

## குருநாதரின் வழிநடத்தலில்

சுவாமிகளின் மாணாக்கர்களும் பிற அன்பர்களும் அம்மையாரை 'அம்மா' என்றே அழைப்பர். அவரும் தாயுள்ளத்தோடு வரும் அன்பர்களை தம்மால் இயன்றவரை உபசரிப்பார். பொருள் பண்டம் கஷ்டமான இத்தவவாழ்வில் கூட இறையடியார்களை உபசரிப்பதில் அவரது பக்குவத்தை சுவாமிகளே பல தடவை மெச்சியதுண்டு. இதுபற்றி அம்மையாரிடம் சுவாமிகள் கூறும்போது "அம்மா உன்னிடம் வரும் அடியவர்களிற்கு நீ செய்யும் பக்குவமான உபசரிப்பை ஏற்றுக்கொள்வதற்கான மனோ பக்குவம் இருக்க வேண்டும். இல்லையோ, அப்படிப்பட்டவர்கள் உன்னுடைய உபசரிப்பை ஏற்க முடியாமல் ஓடியே போய்விடுவார்கள்" என்பார்.

இவ்விடயம் பற்றி அம்மையார் பிற்காலத்தில் குறிப்பிடுகையில் "குடுக்கிறவர் வாங்கிறவர் என்ற பேதம் ஏன்? எல்லாம் ஆரின்டை சொத்து? எல்லாம் இறைவன் சொத்து. மாயை கயிறு கட்டி விளையாடுகிறாள். தேகத்துக்கே உபசரிப்பு? அதுக்கல்லோ (உண்மைப்பொருள்) உபசரிப்பு. இந்த உண்மையான இடத்தில நிண்டு பக்குவமாய் ஒருவருக்கு உபசரித்தால் அவரும் அந்த உண்மையான இடத்திலை நிற்கவேணும். அதை விட்டுட்டு தேகத்துக்குத்தான் உபசரிப்பு எண்டு நினைச்சால் ஓட்டம்தான் எடுப்பார்" என்று மிகச் சுருக்கமாக மிகமிக உயர்ந்த கருத்தைப் பகிடியாகக் குறிப்பிடுவார்.

இக்கருத்து மிகவும் சிந்திக்கத்தக்கது. நமது அன்றாட வாழ்வில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய விடயம் இது. தாய் தந்தையர் பிள்ளைகளிற்குச் செய்யும் கடமைகளை இறைவனிற்குச் செய்யும் கடமைகளாக நினைத்துப் பக்குவமாய்ச் செய்யவேண்டும். இதே பாவனையை கணவன் மனைவியிடமும், மனைவி கணவரிடமும், பிள்ளைகள் பெற்றோரிடமும் ஏன் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவரிடமும் கொள்ளவேண்டும். அப்போதுதான் ஒவ்வொருவரும் தாம் தேடும் நிம்மதி, அமைதி, மகிழ்ச்சி என்பவற்றை அடையமுடியும். இதை விட வேறேதும் வழிகளில் மனிதன்

மௌனமாயிருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது

நிம்மதியையோ பூரண மகிழ்ச்சி யையோ நிறைவையோ அடைந்து விடமாட்டான் என்பதை உறுதியாகக் கூறமுடியும். ஏனெனில் உண்மைப் பொருள் எல்லாவிடத்திலும் உள்ளது. ஒவ்வொரு உயிராக வெளிப்பட்டுத் தெரிவதும் உண்மைப்பொருளே (இறைவன்) உண்மையான விட யத்தை உண்மையான கருத்துடன் அணுகுவதே அறிவு ஆகும். அவ்வாறான மெய்யான அறிவான அணுகுமுறையே வாழ்வில் மகிழ்ச்சியையும் நிறைவையும் உருவாக்கவல்லதாகும்.

அம்மையாரிற்கு வேண்டிய உபதேசங்களையெல்லாம் சுவாமிகள் சிறு சிறு கதைகள் மூலமாக கூறுவது வழக்கம். குருவருள் ஒன்றையே நம்பி தவம் நாடிப் புறப்பட்டவர் என்பதனால் அம்மையார் தவவாழ்வில் நிலைபெற வேண்டும் என்ற பேரார்வம் சுவாமி களிடம் இருந்தது. அவ்வார்வத்தின் வெளிப்பாட்டை அவர் அம்மை யாரிற்குக் கூறிய உபதேசக் கதைகளில் காணலாம். அக்கதைகள் இரத்தினச் சுருக்கமாகவும் ஆழமான ஆன்மீகக் கருத்துக்கள் கொண்டன வாகவும் இருந்தன. இக்கதைகள் மட்டுமன்றி அன்றாடம் நடைபெறும் சிறு சிறு சம்பவங்களைக்கூட கவனத்தில் கொண்டு அதில் ஆன்மீகக் கருத்துக்களைப் புகுத்தி அம்மையாரிற்கு எடுத்துக் கூறுவார். அவற்றை இனிக் காண்போம்.

ஒரு சமயம் சுவாமிகள் அம்மையாரிடம் வெற்றிலை கேட்டார். ஆனால் அம்மையாரிடம் அப்பொழுது கைவசம் வெற்றிலை இல்லை. சற்று வறுமையான நிலை காசும், இல்லை. கடையிலும் ஏற்கனவே கடனும் ஏறி இருந்தது. மேலும் கடன் கேட்டால் என்ன சொல்வார்களோ என்று தயங்கிய நிலையில் அம்மையார் சுவாமிகளிடம் விபரத்தைக் கூறினார். சுவாமிகளும், சரி, சரி இன்றைக்கு வெற்றிலை போடாமல் இருப்பம் என்று கூறிவிட்டுச் சாய்மனைக் கதிரையில் படுத்துக்கொண்டார்.

சுவாமிகள் சாய்மனைக் கதிரையில் படுத்திருக்கும்போது மற்றவர்களுக்கு அவர் துயில் கொள்வது போலத்தான் இருக்கும். ஆனால் அவர் உள்ளமோ மிக உயர் ஆன்மீக நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். இப்படியே சுவாமிகள் சிறிது நேரம் சாய்ந்தபடி இருந்தார். அப்பொழுது நேரம் மாலை ஐந்து மணி. சூரியன் சாய்ந்து கொண்டிருந் தான். பறவைகள் தம் இருப்பிடம் தேடிப் பறந்து கொண்டிருந்தன. அம்மையாரின் உள்ளமோ கவலையில் ஆழ்ந்திருந்தது. சுவாமிகளிற்கு வெற்றிலை கொடுக்க முடியாமல் போய்விட்டதே என அவர் உள்ளம் வருந்தியது. தவக்குடிலின் பின்புறத்தில் அவர் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் வேலுப்பிள்ளை மூத்ததம்பி என்ற அன்பர் ஒருவர் அங்கே வந்தார். அவர் வரும்பொழுது

சீனியும் ஒரு கட்டு வெற்றிலையும், பாக்கு முதலியவற்றையும் கையில் எடுத்துக்கொண்டு வந்தார். சுவாமியைத் தரிசிக்க அவர் அங்கு வந்தார். இதற்கு முன்னொருபோதும் அவர் அங்கு வந்ததில்லை. வந்தவர் சுவாமிகளைத் தாழ்ந்து வணங்கித் தான் கொண்டு வந்த பொருட்களைச் சுவாமிகளிடம் கொடுத்து நின்றார். சுவாமிகள் எழுந்து அம்மையாரை அழைத்து, ''அம்மா சீனி வந்திருக்கிறது. வெற்றிலை இல்லை யென்று கவலைப்பட்டாய், வெற்றிலை பாக்கெல்லாம் வந்திருக்கிறது. இவற்றை யார் அனுப்பியது தெரியுமா? என்று வினவவும் ஷ ஷ இறைவனின் திருவிளையாட்டல்லோ!'' என அம்மையார் கண்ணீர் மல்கினார். சுவாமிகள் அம்மையாரிடம் ஷ ஷ தவழ்கின்ற பிள்ளை நடப்பதற்கு ஒரு பிடிப்பு வேண்டும். அதுபோலத் தவம் நாடி வெளிக்கிடும் அன்பர்களுக்கு இறைவன் தன் கருணையை ஒரு ஆதாரமாகச் சிறிது சிறிதாக உங்களுக்கு விளங்கக் கூடியதாகக் காட்டுவான். அதைப் பற்றுக்கோடாகப் பற்றித் தவவாழ்வில் நாம் நிமிர்ந்து உயர்ந்து நிற்கவேண்டும். அவன் கருணைப் பெருக்கை அப்போது மேன்மேலுங் காண்போம். ஆனால் அவனுடைய சொரூபானுபூதியே முத்தியாகும்'' என்று கூறினார்.

சாதாரண மூலம் பெரிய பெரிய உண்மைகளை எடுத்து விளக்குவதிலும் சுவாமிகள் வல்லவர். மாயையினைப்பற்றி அம்மையாரிற்குப் பின்வருமாறு கூறினார். ஷ ஷ அம்மா, நாகபாம்பு சுருண்டுகொண்டு படுத்திருக்கும். அப்போது அது தன் தலையை நடுவயிற்றிற் புதைத்துக் கொண்டு கிடக்கும். அந்த நிலையில் அதனைப் பார்ப்பவர்கள் அது தன் கொடிய சுபாவத்தை விட்டுவிட்டுச் சாந்தமடைந்துள்ளது என்று நினைப்பர். அதன் உண்மைச் சுபாவத்தைப் பார்க்கவேண்டுமானால் ஒரு தடியை எடுத்து அதன் தலையில் தட்டவேண்டும். அப்போது அது படம் விரித்து ஆடித் தன் சுபாவத்தைக் காட்டும். அதுபோல மாயையை வென்று விட்டதாக நீ நினைத்துக் கொள்ளலாம். ஆனால் ஆசை பற்று போன்றனவற்றால் மாயை மீண்டும் தலை நிமிர்ந்து விடும். ஆகவே, மாயை உன்னை விட்டு முற்றும் அகன்று விட்டதாய் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடாது. எச்சரிக்கையுடன் அவதானமாக இருக்கவேண்டும்'' என்று விளக்கிக்கூறினார்.

இன்னுமோர் சமயம் ஞானத்தைப்பற்றி அம்மையாரிற்குக் கூறியது. ''நாகபாம்பு தனது இரத்தினக் கல்லை மாடி வீடுகளிலா கக்கும்? இல்லை, எங்கோ பற்றைகள் சருகுகளுள்தான் கக்கும். அதேபோல் ஷ ஞானம் என்பது பெரும் சொத்துப் பத்துக்களில் விருப்புடையவர்களிற்கு எட்டாக்கனியேயாகும் என்று உபதேசித்தார்.

(தொடரும்....

உ

## அகவை அறுபதில் மணி விழாக் காணும்
## சிவானந்த வாரிதி- சிவத்திரு வ. குமாரசாமி ஐயா அவர்களை
## வாழ்த்தி வணங்குவோம்!

செல்வி கனகசுந்தரம்பிள்ளை சசிலேகா

திருமுருகன் திருவடிபதித்த புனித பூமியாகிய காங்கேசன் துறை என்னும் பதியில் 23.03.1945 இல் ஐயா அவர்கள் அவதரித்தார்கள். இவரது பெற்றோர்கள் பன்னிரண்டு ஆண்டுகளாகச் செல்வச்சந்நிதி முருகனிடம் தவமிருந்து அவருடைய திருவருளால் இவரைப் பெற்றெடுத்து மகிழ்ந்தார்கள். இறைதன்மை பொருந்திய இவர் சிறுபராயம் தொடக்கம் இறை வழிபாட்டிலும் பொதுத் தொண்டுகளிலும் ஈடுபட்டு மக்களுடைய மனதில் இடம் பிடித்தார். இருபது வயதில் சமயச் சொற்பொழிவுகளில் ஈடுபடத்தொடங்கி இன்று வரை இலகு தமிழில் இன்னிசை கலந்த பேச்சுத்திறமையால் மக்களை இறையின்பத்தில் ஆழ்த்தி வருகிறார். பிரசித்தி பெற்ற ஆலயங்கள் முதல் கிராமங்களில் உள்ள சிறிய ஆலயங்கள் வரை சென்று இப்பணியை மனநிறைவோடு ஆற்றிவருகிறார். ஆன்மீகம் குன்றியிருக்கும் கிராம மக்கள் வசிக்கும் குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று "நோயுள்ள இடத்தில்தான் வைத்தியனுக்கு வேலை" என்று கூறி அங்குள்ள ஆலயங்களில் சொற்பொழிவுகளாற்றி அங்குள்ள மக்களின் இதயத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டவர். மகாபாரதத்தில் சுக்கிராச்சாரியார் சொல்லும் மதுவின் கொடூரத்தைத் தமது பிரசங்கங்களிலெல்லாம் மக்கள் மனதில் பதியக்கூடியவகையில் எடுத்துக்கூறி குடியால் குடிகெட்ட மதுப்பிரியர்களை நல்லாற்றுப்படுத்தி அவர்களின் வாழ்க்கையை வளமுறச் செய்தார்.

இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய இதிகாச புராணநூல்களையும் ஸ்ரீமகாபக்த விஜயம், அபிராமி மான்மியம் முதலிய வேறுநூல்களையும் தலைப்புக்களாகக் கொண்டு சிறுபிள்ளைகளும் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் இலகு தமிழில் சொற்பொழிவாற்றி வருகிறார். வருங்கால சமுதாயத்தைச் சிறந்த முறையில் ஆற்றுப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் இச் சொற்பொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு சிறுபிள்ளைகளுக்குப் பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சொற்பொழிவுத்திறத்தால்

சைவமாமணி - (மல்லாகம் வைரவர் கோயில் )
சிவானந்த வாரிதி - (கற்புலம் மனோன்மணி அம்பாள் ஆலயம்)
இசைஞானத்தியம் - (களபாவோடை நாகபூஷணி அம்பாள் கோயில்)
வாரியார் வாரிசு - (நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயம்)

வண்டமிழ் வேந்தன் - (சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் கோயில்)
சைவத் தமிழ் இசை வாரிதி - (சுன்னாகம் கதிரைமலைச் சிவன் ஆலயம்)
அருளமுதச் சொல்வாரி - (அளவெட்டி நாகவரத நாராயணர் கோயில்)
அருள் ஞான வித்தகர் - (மயிலணி அண்ணமகேஸ்வரர் ஆலயம்)
செந்தமிழரசு - (ஊரெழுகண்ணகை அம்மன் கோயில்)
வியாச அனுக்கிரக வாசகமாமணி - (மல்லாகம் நீலியம்பனை பெரிய தம்பிரான் ஆலயம்)
சைவாசாரிய சிகாமணி - (கந்தவனம் முருகன் கோயில்)
அருள் மொழியரசு - (நீர்வேலி கதிர்காமசுவாமி ஆலயம்)
தத்துவ முத்து - (இணுவில் காளி கோயில்)
முதலிய பல பட்டங்களையும் பெற்றுள்ளார்.

சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஞானச்சுடர்ச் சஞ்சிகையின் ஆரம்பம் முதல் இன்று வரை எட்டு ஆண்டுகளாக மகாபாரதக் கதையை "மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்" என்னும் தலைப்பில் சிறுபிள்ளைகளும் விளங்கிக் கொள்ளக் கூடியவகையில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார். இத்தகைய சைவத் தமிழ் பணியாற்றும் ஐயா அவர்கள் அகவை அறுபதில் தமது அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் இவ்வேளை இனிவருங்காலங்களில் சமயத்திற்கும் தமிழுக்கும் கூடுதலான பணியாற்றுவார் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.

நூறாண்டு கடந்து இவ்வுலகிலே வாழ்ந்து இறைபணியாற்றி வாழ்வில் உயர்வடையவும் அவர்தம பணிகள் சிறந்து விளங்கவும் வாழ்த்துவதோடு எல்லாவற்றுக்கும் ஆற்றங்கரை வேலவனின் துணை இருக்க வேண்டுமென மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

## திருவிளக்கு

பொய் சொல்லாமல் இருப்பது ஒரு சிறந்த குணம். இந்த ஒரு குணம் ஒருவனிடம் இருக்குமானால் மற்ற குணங்கள் தாமாகவே அவனிடம் சேரும். சத்தியம் என்பது என்றும் அழிவில்லாதது. சகல தருமங்களுக்கும் இருப்பிடமாகும். சத்தியமே தவம்; சத்தியமே யாகம்; சத்தியமே கடவுள்; உள்ளத்தில் உள்ள அஞ்ஞான இருள் நீங்க வேண்டுமானால் உண்மை என்கிற திருவிளக்கை ஏற்ற வேண்டும். ஏற்றுவீர்களா?.

உ

# முத்துமாரி அம்மனுக்கு ஒரு முத்துத் தடாகம் (சுயம்பு)

திரு திருப்பணித்தொண்டன் கந்தைக் கணபதி அவர்கள்.

ஈழவளநாட்டின் சிரசாக அமைந்துள்ளது யாழ்ப்பாண தீப கற்பம். அதன் வடபகுதியில் வட மராட்சி அமைந்துள்ளது. வட மராட்சியின் மத்தியில் அமைந்தது அல்வாய் (ஆலவாய்) கிராமமாகும். திருக்கோயில்களும் திருச்சுனை களும் சிறந்து காணப்படும் அக்கிராமத்தில் வடக்குத் தெற்கு எல்லையில் வேவிலந்தை (வேம்பு+ இலந்தை) முத்துமாரியம்மன் தேவி ஆலயம் அமைந்துள்ளது. இவ்வால யம் நூற்றிஐம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

ஓர் ஊர் செழித்து வளம் பெறவேண்டுமானால் அவ்வூரில் ஆலயங்கள் நீர்நிலைகள் யாவும் நிறைந்திருக்க வேண்டும். அப்போது தான் மக்களும் நன்னெறியுடைய வராய் நல்ல உழைப்பாளிகளாய் இருந்து செல்வத்தை ஈட்டுவார்கள். ஆலயங்களிலும் பூசைகள் யாவும் தவறாது சிறப்பாக நிகழும். ஊரில் உள்ள நீர்நிலைகள் உவர்ப்பாக இருந்தாலும் ஆலயக் கிணறுகள் நன்னீர் ஊற்றாகவே எங்கும் அமைந்துள்ளன. இவையெல்லாம் இறைவன் திருவருள் என்றுதான் யாம் எண்ண வேண்டியுள்ளது. இறைவனை வழிபடும் அடியார் எல்லாம் நன்றாகத் தாக சாந்தி செய்யவேண்டும் என்று தான் இறையருள் பாலித்திருப்பதாகவே நம்ப வேண்டியுள்ளது.

வேவிலந்தை முத்துமாரி யம்மன் ஆலயத்தில் ஆண்டு தோறும் ஆடி மாத பூரணைக்கு தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியதாக பதினைந்து நாள்கள் திருவிழா நடைபெறும். 1995 ம் ஆண்டு வைகாசிப் பூரணையில் இவ்வாலயக் குடமுழுக்கு விழா நடைபெற்றது. விழா நிறைவு பெற்றபோது அடியார் மனதில் ஒரு சித்திரத் தேர் செய்யவேண்டுமெனும் ஆவலை அம்மன் உண்டாக்கினார். அதன் படி அமைக்கப்பட்ட சித்திரத் தேரில் 2001 ல் அம்மன் காட்சி தந்து உலா வந்தார். இதன் பின்னர் அம்மன் திருவருளால் பல லட்சங்கள் செல வழித்து ஆலயச் சூழலில் ஒரு கலாச் சார மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இன்னும் அம்மன் ஆலயம் சிறப்பாக அமையவேண்டும் எனும் பேரவாவினால் இராசகோபுரம் அமைக் கும் பணியும் நடைபெறுகின்றது. பல்லாண்டு காலமாக தீர்த்த உற்சவத் தினத்தில் குருபூரணையில் அம்பாள்

இன்பருட்டி கடற்கரைக்குச் சென்று சூரிய உதயநேரத்தில் ஆர்த்த பிறவித்துயர் கெட கடலில் தீர்த்த மாடி வருவது வழமை. இன்னும் இருவருடத்தில் எவ்வாறாயினும் ஒரு தீர்த்தக் கேணி அமைக்கவேண்டும் என அன்பு உள்ளங்கள் கருக்கொண்டன. ஆனால் அம்பாள் திருவருள் ஆலயச் சூழலிலேயே ஓர் அற்புதச் சுனையை வருவிக்க எண்ணியுள்ளார். 2004ம் ஆண்டு மார்கழி மாத ஏகாதசி திருவாதிரை நன்னாளில் ஆலயத்தின் வெளிமண்டப வட கிழக்கு மூலையில் (ஈசானம்) மணிக் கோபுரம் அமைப்பதற்காக 8 அடி சதுரத்தில் அத்திவாரம் வெட்டினார்கள் என்ன அதிசயம்! 4½ அடி தாழத்தில் திடீரென்று ஒரு நன்னீர் ஊற்று மடை திறந்த வெள்ளம் போலச் சீறிப்பாய்ந்தது. இந்த அற்புதத்தைக் கண்டு அனைவரும் ஆச்சரியப் பட்டனர். ஏன் எனில் ஆலயச் சூழலில் 35, 40 அடிக்குக் கீழ்த்தான் நீர் வருவது வழமை. எனவே இந்நீர் ஊற்றைக் கண்டதும் அடியவர்கள் பக்திப் பரவசத்தில் "அரோகரா அம்மனுக்கு அரோகரா" என கோஷமிட்டனர். இது அம்மனின் திருவிளையாடல், அதிசயம் அற்புதம் எனக் கூறிய வண்ணம் இது அம்பாளின் நற்பிரசாரம் பிறவிப் பிணிதீர்க்கும் மருந்து என்று கூறி உணர்ச்சிவசப்பட்டனர். இச்செய்தி ஊரெங்கும் பரவியது மக்கள் திரண்டனர் குருக்கள் மூலம் இத்தீர்த்தத்தைப் பெற்று உட்கொண்டனர். உடலெங்கும் தடவினார்கள் வீட்டிலுள்ளோரும் பயன் பெற வேண்டும் என செம்புகளில் கொண்டு சென்றனர்.

ஆண்டு தோறும் மாசி மாதத்தில் இலட்சசங்கு அபிடேகமும் இலட்ச அர்ச்சனையும் நடைபெறுவது வழக்கம். இம்முறை இந்த அருட்சுனையிலேயே நீர் எடுத்து சங்காபிடேகம் நடைபெற்றது. மக நட்சத்திரத்தில் அம்மன் வீதி வலம்வந்து தீர்த்த மாடியுள்ளார். ஆலயக்குருக்கள் இச்சுனைக்கு முத்துமாரி அம்மனின் முத்துத்தடாகம் என்று பெயரைச் சூட்டினார். ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பதற்கமைவாக அம்மனின் முத்துத் தடாகமும் எட்டடி சதுரத்தில் எட்டடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அண்டம் கடந்த சக்தி - நுண்
அணுவுக் கணுவான சக்தி
பிண்டம் சமைக்கும் சக்தி - எம்மைப்
பேணி வளர்க்கும் சக்தி.

ஓம் சக்தி ஓம்.

அறியாமையைக் காட்டிலும் மோசமான அடிமைத்தனம் எதுவும் இல்லை

உ

# ஆட்கொண்ட போது

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்.

இறைவனால் ஆன்மா ஆட்கொள்ளப்படுவதற்கு அது பரிபக்குவநிலை அடைய வேண்டுமெனக் கூறுவர். திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் ஆட்கொள்ளப்பட்ட போது அவர் எப்படியிருந்தாரென அவரே கூறியுள்ளார். சிவனடியார்களுக்கு அடிமையாக அவரிருந்தார்.

ஒவ்வொருவருக்கும் உறவுகள் பல "எனது தாய்" "எனது தந்தை" என முதலிலே பெற்றோரை உறவுகளாக்கும் நாம், உற்றார், உறவினர் எனச் சுற்றத்தை அதிகரித்து உறவுகளைப் பெருக்கிக் கொள்கின்றோம். இதனால் பாசபந்தங்களும் எம்மை இறுகப் பிணைத்துவிடுகின்றன.

இறைவனின் அடியவர்களுக்கு அவனே தாயும் தந்தையும் சுற்றமும் அனைத்துமாகிறான்.

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரூ ரும்நீ

என்று திருநாவுக்கரசுநாயனார் பாடினார்.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே

என மாணிக்கவாசக சுவாமிகள் பாடினார்.

திருமுறைகளையும் பக்திப்பாடல்களையும் ஓதும்போது இப்படிப் பலரும் பாடியுள்ளதைக் காணலாம்.

எமது உறவினர் அனைவரும் எமக்கு இதமானதே செய்வார்களென்று கூறமுடியாது. எமக்கு விஷமூட்டும் உறவுகளும் உண்டு. ஆனால் இறைவன் உறவாகும் போது அவன் நன்மையே செய்வான். அமுதம் போன்று அவன் எமக்கு அமைந்திடுவான்.

இறைவனையே தந்தையும் தாயும் சுற்றமும் அனைத்துமாய் எண்ணுவோரை, 'சிவனடியார்கள்' எனச்சாதாரணமாக கூறிவிடமுடியுமா? அவர்கள் பெருமை பெற்றவர்கள். சிறப்புடையவர்கள். அத்தகைய சிவன் சீர் அடியார்களுக்கு

அடியவராக இருந்த செப்புறையில் வாழ்ந்த சேந்தன் முடிவற்ற ஆனந்தம் பெற்றிருந்தார்.

இறைவன் சேந்தனுள் புகுந்து, ஆட்கொண்டு மலங்கள் அவரைவிட்டு நீங்கும் வகையில் அருள் செய்ததால் அவர் ஆனந்தம் பெற்றார். அவரை இவ்வாறு ஆட்கொண்டருளியவருக்குப் பல்லாண்டு பாடினார்.

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீர்
அடியார் அடியன் நான் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே

(திருப்பல்லாண்டு)

## பொய் மெய்யானது எப்படி?

இந்த உடம்பை மெய் என்று கூறுவார்கள். தோன்றி மறையும் இந்தப் பொய் உடலை மெய் என்று கூறுகின்றார்கள். ஊருக்குக் கிளம்பும்போது, 'போகின்றேன்' என்று அமங்கலமாகச் சொல்லாமல் 'வருகின்றேன்' என்று மங்கலமாகச் சொல்வது போல் 'தாலி பெருகிற்று' என்று கூறுவதுபோல்; பொய்யான உடம்மை 'மெய்' என்று கூறுவது மங்கல வழக்கு என்று சொல்லுவார்கள். இப்படிச் சொல்வதும் நியாயந்தான்.


இருந்தாலும், வேறு ஒரு சிறந்த நியாயம் இதில் உள்ளது. விளக்கு என்ற சொல் எரிகின்ற சுடரையே குறிக்கும், சந்தனம் இது, சாணம் இது, கட்டை இது, கள்வன் இவன் - என்று விளக்குவது அந்தச் சுடர்தானே. ஆனால் நாம் பித்தளையால் செய்த ஒரு தண்டை விளக்கு என்று சொல்லுகின்றோம். சுடர் தங்குகின்ற இடம் அந்தப் பித்தளைத் தண்டு, ஆதலால், தானியாகு பெயராக அந்தத் தண்டு விளக்கு என்று சொல்லப்பட்டது.

அதுபோல மெய்ப்பொருளாகிய இறைவன் தங்குகின்ற இடம் உடம்பாதலால் (மெய் தங்கும் இடம்) மெய் என்று சொல்லப்பட்டது. ஆகவே மெய் என்பது தானியாகு பெயர் என்று கொள்ள வேண்டும்.

சான்றோர்கள் குற்றத்தைத்தான் வெறுப்பார்கள் குற்றவாளிகளை அல்ல

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைகாசி மாதம் நடைபெறுகின்ற விசாகத்திருவிழாவின் பொழுது ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மதியநேரம் வீதி உலா வருகின்ற நிகழ்வு இடம் பெறுவது வழக்கம். அக்கா அவர்களுக்கு சந்நிதியான் வீதி உலா வருகின்ற அந்த மத்தியான நேரம் உற்சவத்திற்கு செல்வதற்கு சில வசதிக் குறைவுகள் இருந்தமையால் சந்நிதியான் வீதி உலா வருகின்ற நேரம் தான் ஆலயத்திற்கு செல்ல முடியாத நிலமை இருப்பதை ஏற்கனவே தனக்குள் முடிவு செய்திருந்தார்கள். ஆனாலும் உற்சவம் முடிவடைந்தாலும் சந்நிதியானை அன்று மாலை

ஆலயத்திற்குச் சென்று எழுந்தருளிய கோலத்தில் அவனது இருப்பிடத் திலேனும் கண்குளிரப் பார்க்க வேண்டுமென்று சிந்தித்தவாறு உற்சவத்தின் முதல்நாள் இரவு தனது வீட்டில் படுத்திருந்தார்கள். முழுமையாக நித்திரை என்றோ அல்லது முழுமையான விழிப்பு என்றோ கூறமுடியாத நிலையில் படுத்திருக்கும் பொழுது இரவு இரண்டு மணியளவில் அம்மையாரு டைய பெயரைச் சொல்லி அக்கா என பூசகர் குட்டிஐயா அவர்கள் அழைக்கும் குரல் கேட்டது.

இவ்வாறு பூசகர் குட்டிஐயா தனது பெயரைச்சொல்லி அக்கா என்ற அடைமொழியுடன் அழைப் பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்ட மேற்படி அம்மையார் அவர் கள் தனது வீட்டு வெளி வாசலுக்குச் சென்று கதவைத் திறந்து பார்த்தார் கள். அங்கே எவரையும் காண வில்லை. அழைக்கின்ற குரல் கேட்டதும் உண்மை. ஆட்கள் எவரும் அங்கே இல்லை என்பதும் உண்மை என்பதை அந்த அம்மை யார் நன்கு உணர்ந்து கொண்டார் கள். இந்த உண்மைகளை அமைதியாகத் தனக்குள் உள் வாங்கிய அந்த அம்மையார் எதுவித சலனமுமின்றி மீண்டும் வீட்டுக்குள் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டார்கள்.

ஆம் மேற்படி சம்பவம் சென்ற வருடம் அதாவது 2004ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வாகும். தனது பெயரை வெளிப்படுத்துவதற்கு மேற்படி பெண்மணி விரும்பாத காரணத்தால் அவருடைய பெயரை இப்பந்தியில் தவிர்த்து அதற்குப் பதிலாக அம்மையார் என்றே இங்கே குறிப்பிட்டுள்ளோம். ஆனாலும் பெரியவர்களும் சரி வயதில் குறைந்த வர்களும் சரி பொதுவாக அவரை யாரும் பெயர் சொல்லி அழைப்ப தில்லை. பொதுவாக அனைவரும் பெயருடன் அக்கா என்ற அடைமொழி யையும் சேர்த்தே அழைப்பது வழக்கம். அவருடைய பெயர் இரண்டு எழுத்துக் களால் ஆனது என்பதையும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பிரதான வாசலான கிழக்கு வாசலில் உள்ள பிரதான வீதியில் அவருடைய வீடு அமைந்துள்ளது என்ற தகவலையும் வாசகர்களுக்காக இங்கே அறியத் தருகின்றோம்.

2004ஆம் ஆண்டு வைகாசி விசாகத்திருவிழா அனைவரும் எதிர் பார்த்தது போல சிறப்பாக முடிவடைந்துவிட்டது. நேரமும் பிற்பகல் ஆறுமணியைத் தாண்டி விட்டது. இந்நிலையில் மேற்படி அம்மையாரும் தான் சிந்தித்திருந்தது போலவே ஆலயத்திற்கு சென்று ஆலயத்தின் உள்மண்டபத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இவருடைய வருகைக்காக காத்திருந் தவர்கள் போல அன்றைய உற்சவப் பூசையை நடாத்திய பிரதமகுரு

ஆ. சிவசண்முகஐயரும் பூசகர் சின்னக்குட்டிஐயாவும் தங்களுக்குள் ஏதோ கதைத்துக் கொண்டனர். அத்துடன் பிரதமகுரு சிவசண்முக ஐயர் மூலஸ்தானத்திற்குள் சென்று அன்றைய எழுந்தருளி வேலுக்கு அணிந்திருந்த மாலையையும் மற்றும் திருநீறு சந்தனம் புஸ்பங்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்து மேற்படி அம்மையாரிடம் வழங்கினார்கள். அம்மையாரும் உள்ளத்தில் உவகை பொங்க மிகவும் பயபக்தியுடன் அவற்றை இரண்டு கைகளாலும் பெற்று கண்களில் ஒற்றிக்கொண்டார்கள். அதுமட்டுமன்றி வாசலுக்கு மிகவும் அருகாமையில் சென்று மூலஸ் தானத்திற்குள் எழுந்தருளி வேல வனை மலர்களால் அலங்கரிக் கப்பட்ட அந்த அலங்கார சாத்துப் படியுடன் கண்குளிரக்கண்டு அப்பா! முருகா! இந்த அடியவளையும் ஒரு பொருட்டாக நினைத்து எழுந்தருளிய கோலத்தில் உனது தரிசனத்தை எனக்குத்தந்து எனது விருப்பத்தை நிறைவு செய்தாயே என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

மேலும் முதல்நாள் இரவு இரண்டு மணிக்கு குட்டிஐயாவின் குரலில் சந்நிதியான் தனது வீட்டு வாசலில் நின்று தன்னை அழைத்த சம்பவத்தை பிரதமகுரு ஆ. சிவசண் முகஐயருக்கும் குட்டிஐயாவுக்கும் அம்மையார் எடுத்துக் கூறினார்கள். அதே போன்று சிவசண்முகஐயர் அவர்களும் இந்த பிரசாதங்களையும் எம்பெருமான் அணிந்திருந்த மாலை யையும் அம்மையாருக்கு வழங்க வேண்டுமென்று தாம் ஏற்கனவே எந்த விதமான முடிவையும் மேற் கொள்ள வில்லை என்றும் மேற்படி அம்மை யாரைக் கண்டபின்புதான் அவருக்கு அதனை வழங்கவேண்டுமென தமது உள்ளுணர்வு தூண்டியதனாலுமே அதனை அந்த அம்மையாருக்கு வழங்கியதாகவும் கூறினார்கள். இவ்வாறு அம்மையாரும் பூசகர்களும் சந்நிதியானது திருவிளையாடல் தொடர்பான அனுபவங்களை தமக் கிடையில் பகிர்ந்து கொண்டதுடன் சந்நிதியானுடைய அற்புத லீலைகளை எண்ணி அகமகிழ்ந்தனர்.

குடும்ப உறவுகள் இருந் தாலும், தற்பொழுது தனது வீட்டில் தனித்து வாழ்ந்து வரும் மேற்படி அம்மையார் தான் வீட்டில் சமைக்கின்ற சில விஷேட உணவுப் பொருட்களை ஆலயச்சூழலிலிருக்கின்ற ஆலயத் தொண்டு செய்கின்ற தன்னுடன் நெருக்கமாகப் பழகும் அன்பர்களுக்கு அதனை உண்பதற்கு வழங்கி அதில் ஆனந்தம் அடைவார். அத்துடன் அனைவருடனும் கலகலப்பாக சிரித்த முகத்துடன் பழகும் இயல்புள்ளவர். அதேபோன்று அவ்வப்போது தான் சமைத்த உணவுப்பொருட்களை சந்நிதியானுடைய ஆற்றங்கரைக்கு எடுத்துச் சென்று அங்கே உள்ள அணைக்கட்டில் ஏறிநின்று ஆற்றில் உலாவுகின்ற மீன்களுக்கு அந்த உணவுகளைப்போட்டு அவை உண் பதைப் பார்த்து அகமகிழ்வது வழக்கம்.

இவ்வாறு அனைத்து உயிர்களையும் நேசிக்கின்ற இயல்புடைய மேற்படி அம்மையார் 26-12-2004 ஞாயிற்றுக்கிழமை அன்றும் காலை 10மணியளவில் ஆற்றங்கரைக்குச் சென்று மீன்களுக்கு உணவுப்பொருட்களைப் போட்டு அவை உண்ணுகின்ற அழகைக்கண்டு அகமகிழ்ந்தார்கள். அதன்பின் அப்படியே ஆலயத்தின் வாசலுக்கு வந்து சந்நிதியானை வழிபாடுசெய்துவிட்டு வீடு திரும்புகின்ற அதேநேரம் அங்கே ஆற்றங்கரையின் அணைக்கட்டை மட்டுமல்ல ஆலயத்திற்கு அண்மையில் உள்ள 15அடிக்கு மேற்பட்ட உயரமுடைய பாலத்திற்கு மேலாகவும் சுனாமி அலை பொங்கி எழுந்து உயிர்ச்சேதம் உட்பட பல்வேறு அனர்த்தங்களை ஏற்படுத்தும் நிகழ்வு நடந்தேறியது. அது மட்டுமன்றி சுனாமி அலையின் வெள்ளம் ஆலயத்தின் முன் வாசல் வந்து மீண்டும் வடிந்து செல்கின்ற நிகழ்வும் இடம்பெற்றது. இவ்வாறு ஒருசில நிமிட நேர இடைவெளியில் அந்த அம்மையார் ஆற்றங்கரையிலிருந்து விலகியதால் அவருக்கு ஏற்பட இருந்த அனர்த்தத்திலிருந்து அவர் காப்பாற்றப்பட்ட அதிசயத்தையும் சந்நிதியான் நிகழ்த்தியுள்ளார்.

சித்தர்களாகவும், யோகிகளாகவும், ஞானிகளாகவும் ஆண்கள் மட்டுமன்றி பலபெண்களும் சந்நிதி ஆலயச்சூழலில் வாழ்ந்துள்ளார்கள். இதேபோன்று பக்தியின் உச்சநிலையிலோ அல்லது அதற்கும் மேற்பட்ட ஞானநிலையில் இன்றும் பல பெண்கள் சந்நிதிச்சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பெரும்பாலும் சந்நிதிச் சூழலை பூர்வீகமாகக் கொண்டவர்களாகவும் இலைமறை காயாகவும் இவர்கள் வாழ்ந்து கொண்டு இருப்பதையும் நாம் காண முடிகின்றது.

இவர்கள் சந்நிதிச்சூழலிலேயே வாழ்ந்துகொண்டிருப்பதால் நித்திய பூசை நாட்களில் சந்நிதியானை வழிபாடு செய்வதுடன் உற்சவங்கள், விஷேட தினங்கள் மற்றும் விஷேட அபிஷேகங்களின் போதெல்லாம் ஆலயத்தில் பிரசன்னமாகி சாதாரண அடியவர்கள் போல நடமாடி ஆண்டவனுடன் ஒன்றித்து பக்திப் பரவசத்தில் மூழ்கியிருப்பதை நாம் காண முடியும்.

இவர்களது சிந்தனை செயற்பாடு அனைத்தும் சந்நிதியானாகவே இருக்கும். நடப்பவை அனைத்தும் அவன் சித்தமாகவே நடக்கின்றன என்று பொதுவாக எம்மில் பலர் சொல்கின்ற விடயங்கள் இந்த அம்மையாரைப் பொறுத்தவரை ஒரு நம்பிக்கையாக மட்டுமன்றி அன்றாட வாழ்வியல் அனுபவங்களாக இடம் பெற்றுக் கொண்டிருப்பதை எம்மால் நன்கு உணர முடிகின்றது. இவ்வாறு இறையியலை தனது வாழ்வியல் அனுபவமாகக் கொண்டிருப்பதனால் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக எந்தவிதமான மருந்துக்களையும்

உட்கொள்வதை முழுமையாகத் தவிர்த்து வாழ்ந்து வருவதும் குறிப் பிடத்தக்கது.

இந்த அம்மையாரைப் போன்றவர்கள் சந்நிதியானுடன் கொண்டுள்ள உறவுமுறைக்கு எம்மால் அர்த்தம் கூறுவது மிகவும் கடினமானது. ஆனால் அம்மை யாருடன் உரையாடிய பொழுது கண்ணன் என் சேவகன் என்ற பகுதியில் பாரதியார் பாடிய பின்வரும் பாடலின் வரிகளே அடியேனுக்கு ஞாபகம் வந்தது. ஆம் நண்பனாய்..., மந்திரியாய்..., நல்லாசிரியனுமாய்.., பண்பிலே தெய்வமாய்.... பார்வையிலே சேவகனாய்... என்பது போல சந்நிதியானுடன் இவர்கள் கொண்டுள்ள தொடர்பும் உறவும் பல்வகைப்பட்ட வடிவங்களில் காணப்படுவதையே நாம் காண முடிகிறது.

ஓம் முருகா!

(தொடரும்..

## அறமாய் வருவாய்

திரு கே. எஸ். சிவஞானராஜா அவர்கள்

| | | | |
|---|---|---|---|
| ஞானச்சுடரில் | எழுத்தாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | கருத்தாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | அறமாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | திறமாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | குருவாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | திருவாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | பேச்சாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | மூச்சாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | கலையாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | உலகாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | அமுதாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | அழகாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | மறையாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | நிறைவாய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | எமக்காய் | வருவாய் | சந்நிதிமுருகா |
| ஞானச்சுடரில் | வரமாய் | வருவாய் | சந்நிதிமுருகா |

உ

# சித்திரைமாத வாராந்த நிகழ்வுகள்

01-04-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

சொற்பொழிவு:- "தமிழ்க் கிழவி முருகன்"

**வழங்குபவர் :-** செல்வன் யோ. சுதாகரன் (யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)

---

08-04-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**பாடசாலை மாணவர்கள் நிகழ்வு**

**(இணுவில் இந்துக் கல்லூரி)**

---

15-04-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

சொற்பொழிவு:- "யாரொடு நோகேன்"

**வழங்குபவர் :-** ஆ. சிவநாதன் ஆசிரியர்

(ம. மகா. வித்தியாலயம் நெல்லியடி)

---

22-04-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

சொற்பொழிவு:- பெரியபுராணம் [தொடர்]

**வழங்குபவர் :-** சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்

(யாழ்.'. கல்லூரி வட்டுக்கோட்டை)

---

29-04-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## சித்திரை - 2005

**வெளியீட்டுரை** :- S. தேவதாசன் J.P

**மதிப்புரை** :- கி. நடராசா M.A

(அதிபர் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

**ஜனவரி**
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

**பெப்ரவரி**
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

**மார்ச்**
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

**ஏப்ரல்**
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

**மே**
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

**ஜூன்**
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

**ஜூலை**
02.07 .2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

**ஆகஸ்ட்**
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

**செப்ரெம்பர்**
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

**ஒக்ரோபர்**
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

**நவம்பர்**
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

**டிசம்பர்**
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005